# කාර්යය සාධන වාර්තාව - 2016
# செயலாற்றுகை அறிக்கை - 2016
# Performance Report -2016



**නිවාස හා ඉදිකිරීම් අමාත්‍යාංශය**

**வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு**

**Ministry of Housing & Construction**

## வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

# செயலாற்றுகை அறிக்கை

# 2016

இரண்டாம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை.

## கௌரவ அமைச்சரின் செய்தி



புதிய அரசாங்கத்தின் கீழ் 2015ஆம் ஆண்டில் இந்நாட்டின் வீடமைப்பு அபிவிருத்தித் துறை தொடர்பில் ஏற்பட்டுள்ள புத்தெழுச்சியானது 2016ஆம் ஆண்டில் துரிதமான ஒரு முன்னேற்றப் பயணத்தை நாம் முன்னெடுக்கக் காரணமாக அமைந்தது. அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற பல்வேறு நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள சகல மட்டங்களுக்கும் உரித்தான பதவியணியைச் சேர்ந்த அங்கத்தவர்களின் பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பு இந்த ஆண்டில் நாம் பெற்ற முன்னேற்றத்திற்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாம் இந்த அமைச்சின் வேலைகளை பொறுப்பேற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் இந்த நாட்டு மக்கள் எந்தளவுக்கு உக்கிரமான மற்றும் சிக்கலான வீடமைப்பு பிரச்சினைகள் பலவற்றை எதிர்நோக்கியிருந்தார்கள் என்பதை புரிந்துகொள்வதற்கு காரணமாகின்ற முறையான கணக்கெடுப்பொன்று பல வருடகாலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அலுவலர்கள் ஊடாக 2016 ஜூன் மாதத்தில் இருந்து சகல மாவட்டங்களிலும் முறையான ஒரு வீடமைப்பு பற்றிய கணக்கெடுப்பை ஆரம்பிக்க முடிந்தது. நாம் பொதுவாக அறிந்திருந்த அளவைவிடவும் தாண்டிச்சென்று மிகவும் மோசமான மட்டத்தில் பல வீடமைப்புச் சிக்கல்கள் இந்த நாட்டில் காணப்படுவது இந்த கணக்கெடுப்பு செயன்முறை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து வெளிப்படுத்தப்பட்டது. உதாரணமாக பொலன்னறுவை மாவட்டத்தில் காணப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை 118,300 ஆகும் என்பதுடன் இவற்றில் 85,000 அதாவது மொத்த வீடுகளின் எண்ணிக்கையில் சுமார் 70 சதவீதமானவற்றில் வாழும் ஆட்களுக்கு தொடர்ந்தும் வீடமைப்புச் சிக்கல்கள் காணப்படுவது இனங்காணப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பானது இந்த நாட்டில் உள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பூர்த்தியாக மேற்கொள்ள முடிந்துள்ளது. மேற்படி 311 பிரிவுகளிலும் வாழும் 2,563,649 இற்குக் குறையாத எண்ணிக்கையானோர் வீடமைப்பு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய நாடு முழுவதிலும் வாழ்கின்ற 6,094,982 ஆன ஒட்டுமொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் சுமார் 50 சதவீதத்திற்கும் குறையாதோர் பல்வேறு விதமான வீடமைப்புசார்ந்த சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளார்கள் என நாம் கருதமுடியும்.

2015 ஆம் ஆண்டு "உதாகம்மான" வேலைத்திட்டம் மீண்டும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டு ரூபா மில்லியன் 237.5 ஆன தொகை முதலீடு செய்யப்பட்டு 38 கிராமங்களின் வேலைகளை ஆரம்பிக்க எமக்கு முடிந்தது. இந்த ஆண்டில் மாத்திரம் புதிதாக 148 உதாகம்மான கிராமங்களின் வேலைகளை ஆரம்பிக்க முடிந்துள்ளது. இதற்கு மேலதிகமாக "உதாகம்மான", "விசிறி வீடமைப்புக்கடன் திட்டம்", "சாந்து பூசுவதற்கான உதவி", "மணலாறு விசேட வீடமைப்புக் கருத்திட்டம்" மற்றும் "சிறுநீரக நோயாளர்களின் குடும்பங்களுக்கான மீள அறவிட்டுக்கொள்ளப்படாத ரூபா 500,000 ஆன வீடமைப்பு உதவி நிகழ்ச்சித்திட்டம்" ஆகிய பிரதான 06 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மாத்திரம் இந்த ஆண்டில் 106,000க்கும் குறையாத எண்ணிக்கையானோர் பயனடைந்துள்ளனர்.

அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் காணப்பட்ட ஊழல் மற்றும் வள வீண்விரயத்தை முற்றாக ஒழிக்கும் ஆற்றல் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் எமக்கு கிடைத்தது. இதன்மூலம் பெரும்தொகையான பணத்தை சேமித்துக்கொள்ள முடிந்தமை நாம் பெற்றுக்கொண்ட வெற்றியாகும். ஊழல் மற்றும் வீண்விரயத்தை முற்றாக ஒழித்ததையடுத்து அந்தந்த நிறுவனங்களுக்கு உரித்தான சொத்துக்கள் மற்றும் வளங்களை உரிய துறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உச்ச மட்டத்திலும், மிக்க விளைதிறனுடனும் முதலீடு செய்யும் ஆற்றலும் கிடைத்துள்ளது. எமது முயற்சிகளின் பயனாக அரச பொறியியல்

கூட்டுத்தாபனம், கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களை கூடிய விரைவில் இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றியமைக்க முடியும். தேசிய இயந்திரசாதன நிறுவனம் 2016 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துகொண்டுள்ள ஒரு நிறுவனமாக உள்ளது.

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் 2017ஆம் ஆண்டு "வறுமை ஒழிப்பு ஆண்டு" என பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. காலத்திற்கு பொருத்தமான இந்தத் தொனிப்பொருளை வீடமைப்பு அபிவிருத்தியுடன் இணைத்து மிகவும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மீள அறவிட்டுக் கொள்ளப்படாத அடிப்படையில் வீடமைப்பு உதவிகளைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஜனாதிபதி அவர்களும் நானும் இணைந்து சமர்ப்பித்த கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதன்கீழ் 2017ஆம் ஆண்டில் புதிதாக 500 உதாகம்மான கிராமங்களை நிர்மாணித்து பொதுமக்களிடம் கையளிப்பது எமது இலக்காகும்.

கௌரவ பிரதம அமைச்சரின் எண்ணக்கருவின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற நடுத்தர வகுப்பைச் சேர்ந்த சமுதாயத்தினருக்கான 500,000 வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் அரச மற்றும் தனியார் துறைகளின் கூட்டு கருத்திட்டம் ஒன்றாக ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைய வாத்துவை, பனாகொட மற்றும் ராகம வீடமைப்புக் கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நாடு மீண்டும் வீடமைப்பு அபிவிருத்தியின் புத்தெழுச்சிக் காலப்பகுதியினுள் பிரவேசித்துள்ளது. மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களினதும் கௌரவ பிரதம அமைச்சரினதும் வழிகாட்டல் மற்றும் ஆசிர்வாதத்துடன் கிராமிய மற்றும் நகர்ப்புற வீடமைப்புமயமாக்கல் சார்ந்த சவால்மிகு மற்றும் நடைமுறை சார்ந்த இலக்குகளை அடைந்து கொண்டு நிலையான வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் நாம் இரண்டு தசாப்தகால அமைதியின் பின்னர் மீண்டும் பிரவேசித்துள்ளோம். இந்த சவால்மிகு செயற்பணியில் ஈடுபட்டு எமது இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக கௌரவ பிரதியமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்கவிடமிருந்து கிடைக்கின்ற உதவி பெரும் பலம்சேர்க்கின்றது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

"2025இல் யாவருக்கும் புகலிடம்" இனை உருவாக்கிக் கொடுப்பது எமது ஒரே பிரார்த்தனையாகும்.

**சஜித் பிரேமதாஸ**

**வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்**

## கௌரவ பிரதி அமைச்சரின் செய்தி



"நிலையான குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலில் புத்தெழுச்சி" எனும் எமது நோக்கை மையமாகக் கொண்டு தற்போதைய அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பிரதான பங்காளர் என்ற வகையில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் 2016ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கைக்கு செய்தியொன்றை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

2025ஆம் ஆண்டளவில் இந்நாட்டில் வீடுகளற்ற ஒவ்வொரு பிரஜைக்கும் ஒரு வீட்டின் உரிமையை பெற்றுக்கொடுப்பது எமது ஒரே எதிர்பார்ப்பாகும். அதற்காக குறுங்கால மற்றும் நீண்டகால நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்படுவது அத்துறைகளின் பொறுப்பை வகிக்கின்ற அரச அலுவலர்களின் ஒத்துழைப்புடன் பெற்றுக்கொள்ளப்படுகின்ற உண்மையான தகவல்களின் அடிப்படையிலாகும்.

இம்முறை உலக குடியிருப்பு தினத்தின் 30வது ஆண்டு நிறைவு வைபத்தை வீடமைப்புமயமாக்கலை மையமாகக் கொண்டு எனும் தொனிப்பொருளின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசம் ஒன்றில் அமைந்துள்ள திம்புலாகல சுகலாதேவிகம எனும் புதிய கிராமத்தில் மேன்மைதங்கிய ஜனாதிபதியின் தலைமையில் நடாத்த முடிந்தமை நாம் பெற்ற ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

2016ஆம் ஆண்டு எமது அமைச்சினால் வழங்கப்பட்ட விசிறி வீடமைப்புக்கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிதாக 11,600 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதுடன் 148 மாதிரிக் கிராமங்களில் புதிய 4641 வீட்டு அலகுகள் நிர்மாணிக்கப்பட்டு அவற்றுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுத்தமையும் குறைந்த வசதிகளைக் கொண்ட நகர்ப்புறக் குடியிருப்புகளைச் சேர்ந்த 50,000 குடும்பங்களை வலுவூட்டியமையும் நகர்ப்புற குறைந்த வசதிகளைக் கொண்ட நகர்ப்புற குடியிருப்பாளர்களுக்கு 410 புதிய வீட்டு அலகுகளை அபிவிருத்தி செய்ய முடிந்தமையும் நாம் பெற்றுக்கொண்ட வெற்றிகளாகும்.

சுவர்களுக்கு சாந்து பூசப்படாத வீடுகளுக்கு மேற்படி வீடுகளின் வேலைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக சீமெந்து உதவிகளைப் பெற்றுக்கொடுக்கும் கருத்திட்டமும் இந்த ஆண்டில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே விசிறி கடன் நிகழ்ச்சித்திட்டம், சம்பத்செவன நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நாம் இந்த ஆண்டின் உத்தேச இலக்கை அடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

சிறுநீரக நோயாளர்களின் வீடுகளை புதுப்பிக்கும் நடவடிக்கைகளுக்கும், மிக்க வறியவர்களுக்கு வீடமைப்பு உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் செவண உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நாட்டின் சகல மட்டங்களையும் சேர்ந்த ஆட்களை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் 2016ஆம் ஆண்டில் ஆற்றல் கிடைத்ததுடன் 2017ஆம் ஆண்டில் மேற்படி துறைகளில் விசேட முன்னேற்றத்தை பெற்றுக்கொள்வது எமது இலக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் வீடமைப்பு அபிவிருத்தியின் போது நீர் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல், மின்சாரம் வழங்குதல், காணி உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல், வீதிகளை அபிவிருத்தி செய்தல், பாதுகாப்பான வகையில் யானைகளுக்கான வேலிகளை நிர்மாணித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் வழங்குகின்ற ஒத்துழைப்பை மிக்க உயர்வாக நான் மதிக்கின்றேன். எமது அமைச்சின் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகரக்குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, ஓசன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி, கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை ஆகிய நிறுவனங்கள்

தரமான மற்றும் வினைத்திறன்மிக்க சேவையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமை எமது வெற்றிக்கான ஒரு காரணமாக அமைந்துள்ளது.

நிர்மாணிப்புத்துறையில் தனியார் துறையுடன் போட்டித்தன்மையுடன் முன்னோக்கி பயணிக்க கிடைத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. கட்டிட நிர்மாணிப்பு, பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகள், நீர்ப்பாசனம், நீர் வழங்கல் திட்டங்கள் போன்ற நிர்மாணிப்புக் கைத்தொழிலின் நிலையான தன்மையை உறுதிசெய்வதற்கும் பூகோள ரீதியாக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் பிராந்திய ரீதியில் போட்டித்தன்மையுடன் செயற்படுவதற்கும் எமக்கு ஆற்றல் கிடைத்துள்ளது.

எமது நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் போதியளவு பயிற்றப்பட்ட ஊழியப்படையணி இல்லாமை மிகவும் சிக்கலான ஒரு நிலைமையாகும். இதற்குத் தீர்வாக இந்த ஆண்டில் நிர்மாணிப்புக் கலைஞர்கள் 9741 பேருக்கு தொழில் பயிற்சிகளை வழங்கி அவர்களுக்குத் தேவையான உபகரணங்களை இலவசமாக பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தகாலப்பகுதிக்குள் ரூபா மில்லியன் 6224.77 ஆன நிர்மாணிப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தக் கிடைத்துள்ளமையை நான் பெரும்பேறாக கருதுகின்றேன். கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் கிளைகளை ஆரம்பித்து மக்களுக்குத் தேவையான கட்டிட உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வனைத்து விடயங்களையும் வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை, அரச பொறியியல் கூட்டுத்தாபனம், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், கட்டிடத் திணைக்களம், தேசிய இயந்திரசாதன நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சியும் பாராட்டுக்குரியன.

2016ஆம் ஆண்டுக்கான உத்தேச வேலைத்திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும், கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் எமது அமைச்சின் பாரிய வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்துவதற்காக தலைமைத்துவம் வழங்குகின்ற கௌரவ சஜித் பிரேமதாஸ அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பதவியணியினருக்கும் சகல வெற்றிகளையும் அடைந்துகொள்ளும் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ள நிறுவனத் தலைவர்கள் மற்றும் ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் இங்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**இந்திக பண்டாரநாயக்க**

**வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்**

## செயலாளரின் செய்தி



தற்போதைய அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் குறிப்பிடத்தக்களவான மற்றும் சவால்மிகு செயற்பணியை நிறைவேற்றுகின்ற வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு தயார்செய்யப்படுகின்ற செயலாற்றுகை அறிக்கைக்கு மிக்க மகிழ்ச்சியுடன் செய்தியொன்றை வெளியிடுகின்றேன்.

2015 ஆம் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2016 ஆம் ஆண்டில் ரூ.மி. 6999 ஆன பாரியதொரு நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டதுடன், மேற்படி ஏற்பாடுகளில் 97.82% இனை செலவிட்டு சகல அமைச்சுக்களிலும் உச்சளவான நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றத்தை அடைந்துகொண்ட அமைச்சாகும் வாய்ப்புக் கிடைத்ததை இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

“யாவருக்கும் புகலிடம்” (செமட்ட செவண) செய்துகொடுக்கும் அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்கினை வெற்றிகொள்வதற்காக குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கான மாதிரிக் கிராமங்கள் மற்றும் விசிறி வீடமைப்பு அபிவிருத்தி (கடன்) நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதை முன்னிட்டு கௌரவ பிரதம அமைச்சரின் தேர்தல் பிரகடனத்திற்கு அமைய செயற்படுத்தப்படுகின்ற நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல் மற்றும் இனங்காணப்படாத சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள வறிய குடும்பங்கள் மற்றும் மிகவும் வறிய குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களையும் இந்த ஆண்டில் அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், தொடர்மாடி வீடமைப்புத்திட்டங்களை புனரமைத்தல், அரசாங்க வாடகை வீடுகளில் வசிக்கின்றவர்களுக்கு உரித்து உறுதிகளை வழங்கிவைத்தல், நகர்ப்புற குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் பௌதீக மற்றும் சமூக அபிவிருத்திப் பணிகள் மற்றும் கூட்டாட்சி ஆதனங்களின் அபிவிருத்தி பணிகளுக்குமென பாரியளவிலான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், இலங்கையில் நிர்மாணிப்புக் கைத்தொழிலின் வினைத்திறனையும், நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதற்காக இந்த அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 06 அரச நிறுவனங்களை வலுவூட்டுவதற்கும் தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டம் தொடர்பிலான நடவடிக்கைகளை அமுல்படுத்தல், நிர்மாணக் கைத்தொழிலிலுள்ள பயிற்றப்பட்ட ஊழியப் பற்றாக்குறைக்குத் தீர்வாக 2016 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட நிர்மாணக் கலைஞர்கள் 10000 பேரை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் (சில்ப சவிய) தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியமையும் மிக முக்கிய அம்சங்களாகும். இதன் மூலம் இலங்கையில் இடம்பெறுகின்ற துரித அபிவிருத்தியின் நிரந்தரப் பங்காளராக மாறி மிகத்தரமானதும், வினைத்திறன்மிக்கதுமான சேவையைப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளதை நாம் பெற்ற பாக்கியமாகக் கருதுகின்றோம்.

வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கான கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொண்டு தேவையான வளங்களையும், உதவியையும் பெற்றுக் கொடுத்து சரியான முகாமைத்துவத்துடன் அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கான பூரண அர்ப்பணிப்புடன் நாம் செயற்பட்டு வந்தோம். இந்த அமைச்சின் விடயப்பரப்புக்கு உரித்தான கொள்கைசார் தீர்மானங்களை தத்துவமுள்ளதாக்கும் பொருட்டு மேன்மைதங்கிய சனாதிபதி அவர்கள், கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் உள்ளடங்களாக கௌரவ அமைச்சரவை வழங்கிய பூரண ஒத்துழைப்பு தொடர்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இவ்வனைத்து வெற்றிகளையும் அடைந்து கொள்வதற்குச் சரியான தலைமைத்துவத்தை வழங்கி ஆலோசனைகளை வழங்கிவருகின்ற கௌரவ வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச அவர்களுக்கும்,

தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்கி ஊக்குவிக்கின்ற மேற்படி கௌரவ பிரதி அமைச்சர் இந்திக பண்டாரநாயக்க அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

மேலும், சகல பணிகளையும் வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள் உள்ளிட்ட சகல அலுவலர்களுக்கும், அபிவிருத்திச் செயன்முறைக்கு நேரடியான பங்களிப்பை வழங்கி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சகல நிறுவனங்களினதும் நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட சகல பதவியணியினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டபிள்யு.கே.கே. அத்துகோரல**
**செயலாளர்,**
**வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு**

## உள்ளடக்கம்


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 36 - 37 |
| 2. | அமைச்சின் நோக்கும், செயற்பணியும் | 38 |
| 3. | அமைச்சின் விடயப்பரப்பு | 38 |
| | 3.1 அமைச்சின் பிரதான விடயப்பரப்புகள் | 39 |
| 4. | அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு | 40 |
| 5. | அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 41 - 42 |
| 6. | அமைச்சின் ஒழுங்கமைப்பு | 44 - 47 |
| | 6.1 நிருவாகப் பிரிவு | |
| | 6.2 திட்டமிடல் பிரிவு | |
| | 6.3 வீடமைப்புப் பிரிவு | |
| | 6.4 தொழில்நுட்பப் பிரிவு | |
| | 6.4.1 பொறியியல் சேவைகள் பிரிவு | |
| | 6.4.2 நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவு | |
| | 6.4.3 நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவு | |
| | 6.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு | |
| | 6.6 நிதிப் பிரிவு | |
| | 6.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | |
| 7. | அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் | 49 - 51 |
| | 7.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | |
| | 7.2 நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை | |
| | 7.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை | |
| | 7.4 அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | |
| | 7.5 கட்டிடத் திணைக்களம் | |
| | 7.6 அரசாங்க தொழில்சாலை | |
| | 7.7 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் | |
| | 7.8 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை | |
| | 7.9 வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் | |
| | 7.10 ஓசன் வீவ் அபிவிருத்தித் தனியார் கம்பனி | |
| 8. | நிதி ஏற்பாடுகள் | 53 - 54 |
| 9. | ஆண்டுக்கான அமைச்சின் முன்னேற்றம் | 55 - 70 |
| | 9.1 நிருவாகப் பிரிவு | |
| | 9.2 திட்டமிடல் பிரிவு | |
| | 9.3 வீடமைப்புப் பிரிவு | |
| | 9.4 தொழில்நுட்பப் பிரிவு | |
| | 9.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு | |
| | 9.6 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | |
| 10. | அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள் | 72 - 74 |

# 01. அறிமுகம்

நிலைபேறான குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலின் புத்தெழுச்சி எனும் நோக்குக்கு அமைய செயற்பட்டு தற்போதைய அரசின் கொள்கைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ள வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவான பெறுபேறுகளை பெற்றுக் கொடுத்துள்ளதுடன் நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையிலும், சகல இனங்களையும் உள்ளடக்கும் வகையிலும் அமுல்படுத்தப்பட்டன. குறைந்த வருமானம் பெறும் சமுதாயத்தினர், மிகவும் வறிய மக்கள் குழுவினர், நகர்ப்புறப் பிரதேசங்களில் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தினர், சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ளவர்கள் மற்றும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள் உட்பட சகல இனப்பிரிவினர்களையும் இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டங்கங்கள் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டதுடன், இதற்காக 2015 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அடித்தளம் சிறந்த உறுதுணையாக அமைந்திருந்தது.

இலங்கையில் காணப்படுகின்ற வீடமைப்புச் சிக்கலுக்கு நிலைபேறான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வீடமைப்புத் தேவை தொடர்பாக முறையான கணக்கெடுப்பொன்றை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் இற்றைப்படுத்தக்கூடிய தரவுக் கட்டமைப்பை பேணிவருதல் அத்தியாவசியமாகும். அதற்கமைய இலங்கையில் காணப்படுகின்ற வீடமைப்புத் தேவைகளை இனங்காண்பதற்கான முறையான கணக்கெடுப்பொன்றை நாடு முழுவதிலுமுள்ள சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் நடாத்துவதற்கு 2016 ஆம் ஆண்டு அமைச்சுக்கு ஆற்றல் கிடைத்தது. இதன் பயனாக இலங்கையில் வாழும் 2,563,649 குடும்பங்களுக்கு ஏதேனுமொரு வகையிலான வீடமைப்புச் சிக்கல் காணப்படுகின்றமை அறியக்கிடைத்தது. மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது.

இதற்கமைய வீடுகள் மற்றும் காணிகள் இல்லாத குடும்பங்களுக்கு நிலத் துண்டொன்றின் உரித்துடன் ஒரு வீட்டின் உரித்தைப் பெற்றுக் கொடுக்கின்ற உதாகம்மான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பூரணமான புதிய உதாகம்மான கிராமங்கள் 180 இற்கும் மேற்பட்டவைகளின் பணிகள் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், வீடுகளை நிர்மாணிப்பதற்கு 3 இலட்சம் ரூபா ஆன கடன் நிவாரண வட்டியின் கீழ் பயனாளிகளான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. இதன் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற புதிய மாதிரிக் கிராமங்களில் வாழும் சமுதாயனத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பலவும் அமுல்படுத்தப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, உதாகல கம்மான, விசிறி வீடமைப்புக் கடன், சாந்துபூசுவதற்கான உதவி, மணலாறு விசேட வீடமைப்புக் கருத்திட்டம் மற்றும் சிறுநீரக நோயாளர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற ரூபா 500,000 ஆன வீடமைப்பு உதவி நிகழ்ச்சித்திட்டம் ஆகிய பிரதான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் சுமார் 114,000 இற்குக் குறையான எண்ணிக்கையான குடும்பங்களுக்கு பயன்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நடுத்தர வருமானம் பெறுவோருக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் கௌரவ பிரதம அமைச்சரின் எண்ணக்கருவை அமுல்படுத்தி அரச மற்றும் தனியார் துறையின் கூட்டுக் கருத்திட்டமொன்றாக நாட்டின் உப நகர்ப் பிரதேசங்களில் நடுத்தர வகுப்பினருக்கான வீடுகளை நிர்மாணிக்கின்ற நடவடிக்கைகளும் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கமைய, நடுத்தர வகுப்பினருக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய விலைக்கு இந்த வீடுகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

மேலும், நகர்ப்புறக் குடியிருப்புக்களில் வாழும் மக்களை பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டுவதை நோக்காகக் கொண்டு சுயசக்தி மனித அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தி சமுதாயத்தின் திறமை, மனப்பாங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேமிப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை கொழும்பு நகர் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் அமுல்படுத்துவதும் இடம்பெறுவதுடன், அவர்களை பொருளாதார அபிவிருத்தியின் வெற்றிகரமான பங்காளர்களாக மாற்றியமைக்கும் பெரும் செயற்பணி இதனூடாக ஆற்றப்பட்டு வருகின்றது.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் நிர்மாணத் துறையானது முன்னோடிப் பணியொன்றை ஆற்றிவருவதுடன், நிர்மாணத் துறையில் இடம்பெறுகின்ற விருத்திக்கு அமைய ஊழியச் சந்தையும் விஸ்தரிக்கப்படும். பிராந்திய மற்றும் பூகோள ரீதியில் ஏற்படக்கூடிய போக்குகள் மற்றும் உள்நாட்டு ஊழியச் சந்தைக்கு மனித வளத்தைப் பூர்த்தி செய்வதற்காக உயர் தரத்தைக் கொண்ட ஊழியப் படையணியை உருவாக்குவதற்காக சில்வ சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணக் கலைஞர்களை பயிற்றுவிப்பது நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையின் போது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தித் துறையானது மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. பெருந்தெருக்கள், பாலம், நீர்ப்பாசன நிர்மாணிப்புக்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி தொடர்பான பல்வேறு கருத்திட்டங்கள் அமைச்சின் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களான, இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், தேசிய இயந்திரசாதன நிறுவனம், கட்டிடத் திணைக்களம் மற்றும் அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் போன்றவற்றினால் அமுல்படுத்தப்பட்டன.

இதற்கமைய, இலங்கையின் நிலைபேறான அபிவிருத்திச் செயன்முறையின் பங்காளராக மாறி 2016 ஆம் ஆண்டு அமைச்சு மற்றும் அதன் இணை நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டு தொடர்பிலான அமைச்சின் செயலாற்றுகை பற்றிய அறிக்கை இதில் உள்ளடங்குகின்றது.

# 02. அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி




"நிலையான குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலின் புத்தெழுச்சி"




"இலங்கைத் தொழில்முயற்சியாளர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் ஊழியப் படையணியை ஆற்றல்கள் மற்றும் வளங்கள் மிக்கவர்களாக்கி திட்டமிட்ட சுற்றாடல்களுக்குச் சாதகமான மற்றும் தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்தல் மற்றும் சமுதாயத்தின் பங்கேற்புடன் அடிப்படை வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை உருவாக்குதவதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்"

# 3.அமைச்சின் விடயப்பரப்பு மற்றும் பிரதான விடயப்பரப்புக்கள்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக கொள்கைகள், அபிவிருத்தித் திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ள உரிய நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுத்தல்

# 3.1. அமைச்சின் பிரதான விடயப்பரப்புக்கள்

**வீடமைப்புத் துறை**

01. குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் உள்ளடங்களாக பொது மக்களின் வீடமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வீடமைப்பு நிதி உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

02. சுற்றாடலுக்கு சாதகமானவாறு செலவினத்திற்கு ஏற்ற பயன்களைப் பெற்றுத்தருகின்ற வீடமைப்பு தொழில்நுட்ப முறைகள் பற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டல்.

03. வீடமைப்பு விடயம் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

+

**நிர்மாணத் துறை**

01. நிர்மாண விடயம் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், பின்னாய்வு, மதிப்பீடு செய்தல்.

02. நிர்மாணக் கைத்தொழிலுக்கு ஆலோசனை மற்றும் ஒழுங்குபடுத்தும் சேவைகளை வழங்குதல் மற்றும் கனரக நிர்மாண உபகரணங்களை இயக்குவது மற்றும் பராமரிப்புச் செய்வது பற்றிய பயிற்சி.

03. உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் நியமங்களுக்கு அமைய நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், பதிவு செய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்தல்.

+

**பொறியியல் துறை**

01. அரச நிறுவனங்களுக்கு இயந்திரப் பொறியியல் சேவைகளை ஆற்றுதல்.

02. அரச உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் ஏஜனய கட்டிடங்களுக்கான நியமங்களையும், நியதிகளையும் நிர்ணயித்தல்.

+

**பொது வசதிகள் துறை**

01. கூட்டாட்சி ஆதனங்களின் முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள்.

02. பொதுக் கூட்டாட்சி ஆதனங்களை மறுசீரமைப்புச் செய்தல் மற்றும் வினைத்திறனுடனும், துரிதமாகவும் வீடுகளின் உரிமைகளை பொறுப்பளித்தல்.

→ **வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு**

# 4. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு



## 5. அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

| தொ.இல. | பதவி | சம்பள அளவுத் திட்டம் | ஏற்புடைய சேவை | அங்கீகரிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | செயலாளர் | SL 4 | | 01 |
| 02 | மேலதிகச் செயலாளர் (நிருவாகம், நிதி) | SL 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 03 | மேலதிகச் செயலாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 04 | மேலதிகச் செயலாளர் (தொழில்நுட்பம்) | SL 3 | இ.பொ.சே. 1 | 01 |
| 05 | பிரதம நிதி அலுவலர் | SL 3 | இ.க.சே. விசேட | 01 |
| 06 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) | SL 1 | இ.நி.சே. 1 | 01 |
| 07 | பணிப்பாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 1 | இ.நி.சே. 1 | 01 |
| 08 | பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) | SL 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 09 | பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.தி.சே. 1 | 01 |
| 10 | பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | SL 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 11 | பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு அபிவிருத்தி) | SL 1 | இ.பொ.சே. | 01 |
| 12 | வீடமைப்பு ஆணையாளார்<br>பிரதம கணக்காளர் | SL 1<br>SL 1 | -<br>இ.பொ.சே.1 | 01<br>01 |
| 13 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 1 | இ.நி.சே. 1.11/111 | 02 |
| 14 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) | SL 1 | இ.பொ.சே.11/1,11/11 | 01 |
| 15 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.தி.சே.11/1,11/11 | 01 |
| 16 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.பொ.சே 11/1,11/11 | 01 |
| 17 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | SL 1 | இ.பொ.சே.11/1,11/11 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு அபிவிருத்தி) | SL 1 | இ.பொ.சே.11/111 | 01 |
| 19 | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | SL 1 | இ.நி.சே.111 | 02 |
| 20 | கணக்காளர் | SL 1 | இ.க.சே.11/1,11/11 | 02 |
| 21 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | SL 1 | இ.க.சே | 01 |
| 22 | சட்ட அலுவலர் | SL 1 | திணைக்கள | 01 |
| 23 | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர் | SL 1 | இ.த.தொ.சே.2/II | 01 |
| 24 | நிருவாக அலுவலர் | MN7 | அ.மு.உ.சே. (சிறப்புத்தரம்) | 01 |
| 25 | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் (தற்காலிகம்) | -- | -- | 01 |
| 26 | மொழிபெயர்ப்பாளர் | MN6 | மொழிபெயர்ப்பாளர் சேவை | 02 |
| 27 | வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 01 |
| 28 | வழங்கல் உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 01 |
| 29 | அபிவிருத்தி உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 25 |
| 30 | வீடமைப்பு அபிவிருத்தி உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 11 |
| **31** | முகாமைத்துவ உதவியாளர் | MN4 | அ.மு.உ.சே. | 19 |
| 32 | தொழில்நுட்ப அலுவலர் | MT2 | இ.தொ.சே. | 43 |
| 33 | அபிவிருத்தி உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 05 |
| 34 | கனிய அளவையாளர் (QS) | MT2 | இ.தொ.சே | 01 |
| 35 | சாரதி | PL3 | சாரதி சேவை | 26 |
| 36 | அலுவலக சிற்றூழியர் | PL1 | அலுவலக சிற்றூழியர் சேவை | 26 |
| **37** | வீடியோ படப்பிடிப்பாளர் (தற்காலிக) | | | 01 |
| **38** | புகைப்படப்பிடிப்பாளர் (தற்காலிக) | | | 01 |
| **39** | அலுவலக கலைஞர் உதவியாளர் (தற்காலிக) | | | 01 |
| **மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை** | | | | **193** |

# 6. அமைச்சின் ஒழுங்கமைப்பு



## 6.1 நிருவாகப் பிரிவு

“நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சினால் அரசாங்கக் கொள்கைகளை அமுல்படுத்தும் போதும் பொது நலன்புரிக்காக மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு பணிகளின் போதும் அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் ஒத்துழைப்பினை வழங்கி அதற்குத் தேவையான வேலைச் சூழலை ஒழுங்குசெய்து கொடுத்தல் மனித வள மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனுடனும் உற்பத்தித் திறனுடனும் முகாமைத்துவம் செய்வது நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது”

### நிருவாக பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சில் சேவையாற்றுகின்ற சகல அலுவலர்களினதும் தாபான நடவடிக்கைகளை பேணி வருதல்.
2. அமைச்சின் சகல பராமரிப்பு நடவடிக்கைகளும்.
3. அமைச்சின் வழங்கல் நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
4. அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் அமைச்சின் தலைமீட்டின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சகல நிருவாக நடவடிக்கைகளும்
5. அமைச்சின் பதவியணி சம்பந்தமான நடவடிக்கைகள்.
6. அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
7. அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.
8. உற்பத்தித் திறன் செயற்பாடுகளை நடாத்தல்.
9. அமைச்சின் நடவடிக்கைகளுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
10. அமைச்சின் அலுவலர்களுக்கான பயிற்சித் தொடர்களை நடாத்தல்.

## 6.2 திட்டமிடல் பிரிவு

“அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடப்பட்டவாறு முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நிறுவனங்களை வழிநடாத்த உதவுதல்”

“வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உரிய தரப்பினர்கள் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்தல்”

“வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறையின் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு நிறுவனங்களினால் தயார் செய்யப்படுகின்ற கருத்திட்டப் பிரேரணைகளை நிதி அமைச்சினூடாக அங்கீகரித்துக்கொள்ள உதவுவதும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.”

### திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சின் நோக்கு மற்றும் நோக்கங்களுக்கு ஏற்புடையதாக அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் செயல் ரீதியான திட்டத்தைத் தயார் செய்வதற்கான உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மாதாந்த மற்றும் வருடாந்த செயற்திட்டத்திற்கமைய மதிப்பீடு செய்தல்.
3. வரவு செலவுத்திட்ட விவாத குழுநிலைக்கு அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைத் தயார் செய்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
4. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான தகவல்களைத் தயார் செய்வதும் அறிக்கையிடுவதும்.
5. அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள கருத்திட்டப் பிரேரணைகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.

## 6.3 வீடமைப்புப் பிரிவு

“வீடமைப்புத் துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் பொதுவசதிகள் ஆகிய விசேட துறைகளின் கீழ் தேசிய திட்டங்களை திட்டமிடல், திட்டங்களைத் தயார் செய்தல், வழிநடாத்தல், பின்னாய்வு, மற்றும் அத்துறையில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.”

### வீடமைப்புப் பிரிவின் பிரதான பணிகள்

#### 1. கொள்கைகளை வகுத்தல்

- வீடமைப்புத் துறையின் முன்னேற்றத்துக்குத் தேவையான கொள்கைகளைத் தயார் செய்தல்.
- வீடமைப்புத் துறைக்கு ஏற்புடையதான கொள்கைகளை ஏனைய அரசதுறை நிறுவனங்களுடன் இணைந்து அமுல்படுத்தல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமுதாய அபிவிருத்தி.
- மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய வீடமைப்புக் குழுக்களைத் தாபித்தல்.
- உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் வீடமைப்பு, நிர்மாணிப்பு சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும், உலகக் குடியிருப்புத் தினத்தைக் கொண்டாடுவதும்.

#### 2. காணிகள் பற்றிய கடமைகள்

- வீடமைப்பு அபிவிருத்தி நோக்கங்களுக்கு காணிகளைச் சுவீகரித்தல்/ பொறுப்பேற்றுக் கொள்வது சம்பந்தமான நடவடிக்கைகள்.
- வீடமைப்பு நோக்கங்களுக்கு காணிகளை நீக்குவது சம்பந்தமான நடவடிக்கைகள்
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 8(1) பிரிவின் கீழ் காணிகள்/ வீடுகளுக்கான சட்ட ரீதியான உரித்தினை பொதுமக்களுக்கு நீக்குதல்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான காணிகளில் சட்ட விரோதமாக வீடுகளை நிர்மாணித்து வசித்துள்ள வசிப்பாளர்களை அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய ஒழுங்குபடுத்தல்.

#### 3. வீடமைப்பு அபிவிருத்தி

- நாட்டின் வீடமைப்புத் தேவைக்குப் பொருத்தமானவாறு வீடமைப்பு நிர்மாணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை மறுசீரமைத்தல்.
- வீடமைப்புக் கடன் உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- வீடமைப்புத் திட்டங்கள் சம்பந்தமான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைச் சமர்ப்பித்தல்.
- வேறு அரச நிறுவனங்களுடன் இணைந்து வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் வீடமைப்புக் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமுதாய அபிவிருத்தி.

## 6.4 தொழில்நுட்பப் பிரிவு

### 6.4.1 பொறியியல் சேவைகள் பிரிவு

“நிர்மாணிப்புக் கருத்திட்டங்களுக்கு நியாயமான மற்றும் தாங்கிக்கொள்ளக் கூடிய விலைகளை நிர்ணயிப்பதன் மூலம் ஒட்டுமொத்த நிர்மாணிப்புக் கைத்தொழிலின் மொத்த நிர்மாணிப்புச் செலவினத்தைக்

கட்டுப்படுத்துவது மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு வெளிப்படைத் தன்மை மிக்க நியாயமான விலைகளுக்கமைய ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்க உதவுவதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.”

## பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதான பணிகள்

1. அரசாங்க நிறுவனங்களின் நிர்மாணிப்பு சம்பந்தமான நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் வழங்கல் குழுக்களை நியமனம் செய்தல்.
3. ஒப்பந்த வித்தியாசங்களுக்கு அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.
4. அமைச்சின் வழங்கல் குழுவின் தீர்மானங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
5. ஒப்பந்ததாரர்கள் சம்பந்தமான நிர்மாணிப்புத் துறைக்குரிய தரவுக் கட்டமைப்பு மற்றும் நிர்மாணிப்புத் துறை சம்பந்தமான விலைகள் பற்றிய தரவுக்கட்டமைப்பைப் பேணிவரல்.

### 6.4.2 நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவு

“சுற்றாடலுக்குச் சாதகமான, தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்கு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிநடாத்துவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.”

## நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவின் பிரதான பணிகள்

1. நிர்மாணிப்புத் துறையுடன் இணைந்துள்ள நிர்மாணிப்பு மற்றும் பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை நிர்மாணிப்புக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக வழிநடாத்தல்.
2. நிர்மாணத் துறைக்குத் தேவையான ஊழியப் படையைத் தயார் செய்தல்.
3. தொழில் வல்லுனர்கள், நிர்மாணிப்புக் கலைஞர்களை திறமையும் அறிவும் மிக்கவர்களாக்குதல் மற்றும் தரமான நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்காக அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிநடாத்தல்.

### 6.4.3 நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவு

“பிரதானமாக நகர்ப் பிரதேசங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுகின்ற மக்கள் மற்றும் ஏனைய மக்களுக்குத் தேவையானவாறு வசிப்பதற்கு ஆற்றல் உள்ள வசதிகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதை வழிநடாத்தல் மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தியானது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.”

## நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அபிவிருத்திப் பிரேரணைகளை அமைச்சின் நிலையான கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவின் ஊடாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல்.

2. நகரக் குடியிருப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

## 6.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

இந்தப் பிரிவு 1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுகின்றது. அவ்வாறே, 1972 இன் 7 ஆம் இலக்க வாடகைச் சட்டத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சில பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது.

“மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரதான நோக்கங்களான வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக இந்தப்பிரிவு செயற்பட்டுவருகிறது.

## 6.6 நிதிப் பிரிவு

“அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்புடையதாகின்ற நோக்கங்களை அடைந்துகொள்ளத் தேவையான நிதி வளம் மற்றும் ஆலோசனையைப் பெற்றுக்கொடுத்தல், மேற்படி வளங்களைப் பயன்மிக்கவாறும், வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் நிருவாக முறைகள் பற்றி ஆலோசனை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.”

### நிதிப் பிரிவின் பிரதான பணிகள்

1. நிதி பற்றித் திட்டமிடல்.
2. வரவுசெலவுத் திட்டமிடல்
3. நிதியைப் போதியளவிற்கு உரிய நேரத்திற்குப் பெற்றுக்கொள்ளல்.
4. அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நிதி வழங்குதல் மற்றும் செலவிடல்.
5. சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு செலவினம் மற்றும் நிதி முன்னேற்றம் பற்றி உரிய திகதிகளுக்கு அல்லது அதற்கு முன்னர் அறிக்கையிடல்.

## 6.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

“நிறுவனங்களின் உத்தேச நோக்கங்களை யதார்த்தங்களாக மாற்றியமைத்துக் கொள்வதற்காக சிறந்த நிதி நிருவாகம் மற்றும் முறையான முகாமைத்துவத்தை தாபித்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.”

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் நிதி நிருவாகம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்கேற்று அந்த நடவடிக்கைகளை மென்மேலும் முறையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்காக முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து உதவுதல் இப்பிரிவின் பிரதான பணிகளாகும்.

# 2016 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சில அபிவிருத்திக் கருத்திட்டங்கள்



மணலாறு இசுறுபுர மாதிரிக் கிராமத்தை திறந்துவைத்தல்



திஸ்ஸமஹாராம, சஹனகம மாதிரிக் கிராமத்தை திறந்துவைத்தல்



ஹம்பாந்தோட்டை, சங்கிந்தகம மாதிரிக் கிராமத்தை திறந்துவைத்தல்



தெல்தோட்டை, ரன்கெத்கம மாதிரிக் கிராமத்தை திறந்துவைத்தல்



குருநாகல், எதிரிமனகம மாதிரிக் கிராமத்தை திறந்துவைத்தல்



புலத்சிங்ஹல, நவோத்யகம மாதிரிக் கிராமத்தை திறந்துவைத்தல்

# 7. அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள்

## 7.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையானது 1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் மூலம் இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தாபிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரசபை அதன் கொழும்பில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்கு மேலதிகமாக 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 2 நகர அலுவலகங்களைக் கொண்டுள்ளதுடன் நாடு முழுவதும் வீடமைப்பு மற்றும் வீடமைப்பு அபிவிருத்தித் துறையில் தனது நடவடிக்கைகளை அமுல்படுத்தி வருகின்றது.

## 7.2 நகர குடியிருப்பு அதிகாரசபை

2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அதிகார சபைச் சட்டத்திற்கமைய இந்த அதிகார சபை நிலையான நகர குடியிருப்பு அபிவிருத்தியை ஏற்படுத்துவதை உறுதிசெய்யும் பொருட்டு தற்போது காண்பபடுகின்ற வீட்டு அலகுகளை மேம்படுத்துவதன் மூலம் அல்லது சிறந்த நல்ல வீடமைப்பு வசதிகள் மற்றும் ஆகக் குறைந்த வசதிகளுக்கான பிரவேசத்தை செய்துகொடுப்பதன் மூலம் சேவை வசதிகள் குறைவான நகரக் குடியிருப்புகளில் வசிக்கும் ஆட்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு தாபிக்கப்பட்ட நிறுவனமாகும்.

## 7.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

2003 இன் 24 ஆம் இலக்க பொதுவசதிகள் சபை (திருத்தச்) சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை கூட்டாட்சி நிர்மாணிப்புகள் மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான ஒழுங்குறுத்தல் அதிகாரசபையாகும். மேலும் 1982 இன் 45 ஆம் இலக்க, 2003 இன் 39 ஆம் இலக்கச் சட்டங்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் நியமங்களை ஒழுங்குறுத்துவதும் இந்த அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் மற்றுமொரு முக்கிய நோக்கமாகும்.

## 7.4 அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் பேணி வருகின்ற பகுதியளவான அரச நிறுவனமொன்றான இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் 1962 ஜனவரி 01 ஆம் திகதிய 12841 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாபிக்கப்பட்ட நிறுவனமாகும்.

அரச பொறியியல் கூட்டுத்தாபனமானது நிர்மாணிப்புத் துறையின் அரச துறையைச் சேர்ந்த முன்னோடி நிறுவனமாகும். இதன் மூலம் பொறியியல் சேவையை வழங்குதல், ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், நிர்மாணிப்பு இயந்திர சாதனங்களை வழங்குதல், திட்டங்களை வடிவமைத்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் போன்றன நிறைவேற்றப்படுகின்றன.
அவ்வாறே, இக்கூட்டுத்தாபனம் 2009 ஆம் ஆண்டு முதல் ISO 9001:2000 தரச்சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ளதுடன் அண்மைக் காலத்தில் ISO 14001:2004 சுற்றாடல் முகாமைத்துவச் சான்றிதழையும் பெற்று போட்டித்தன்மையுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிர்மாணிப்புத்துறைசார் நிறுவனமாகும்.

## 7.5 கட்டிடங்கள் திணைக்களம்

ஆரம்பத்தில் அரசாங்க வேலைகள் திணைக்களத்தின் ஒரு பகுதியாகக் காணப்பட்டதுடன் 1969 இல் “ஏ” தரத்தைச் சேர்ந்த திணைக்களமொன்றாக கட்டிடத் திணைக்களம் தாபிக்கப்பட்டது. அப்போதைய சகல அரச கட்டிடங்கள் மற்றும் அது சம்பந்தமான சேவைகளினதும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள், பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் கட்டிடத் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன். மேற்படி சகல நடவடிக்கைகளும் கட்டிடத் திணைக்களத்தின் மாவட்ட பொறியியல் அலுவலகங்கள் 27 இன் ஊடாக 5000 இற்கும் மேற்பட்ட நிரந்தர ஊழியர்களைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்டன.

1989 இல் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதையடுத்து கட்டிடத் திணைக்களம் கொழும்பில் அமைந்துள்ள தலைமையகம் மற்றும் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் தாபிக்கப்பட்ட பிரதான 7 பொறியியல் அலுவலகங்களை உள்ளடக்கியதாக மீளமைக்கப்பட்டது.

## 7.6.அரசாங்க தொழிற்சாலை

அரசாங்கத் தொழிற்சாலை மூலம் அரசாங்க நிறுவனங்களுக்கு இயந்திர, பொறியியல் துறையில் உலோக மற்றும் தளபாடங்கள் சம்பந்தமான வேலைகள், பொருட்கள், சேவைகளை ஆற்றும் பணிகள் மற்றும் இயந்திரப் பொறியியல் துறையின் வேலைத்தளப் பயிற்சியளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 7.7 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்

அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1971 ஒக்டோபர் 01 ஆம் திகதி பொறியியல் நிறுவனமொன்றாகத் தாபிக்கப்பட்டதுடன் தற்போது வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

இந்தக் கூட்டுத்தாபனம் பிரதான பொறியியல் நிறுவனம் என்ற வகையில் பாலங்கள், பெருந்தெருக்கள், கட்டிடங்கள், சுரங்கப் பாதைகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் போன்றவற்றைத் திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதன் மூலம் இந்த நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பினை வழங்கி வருவதுடன் பாலங்களை நிர்மாணித்தல் தொடர்பில் இலங்கையிலுள்ள முக்கிய நிறுவனமாகவுள்ளது. அவ்வாறே சுரங்கப் பாதைகளை நிர்மாணிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ள ஒரே இலங்கை நிறுவனமும் இந்தக் கூட்டுத்தாபனமாகும்.

நிர்மாணப் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சகபயினால் இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு C1 தரத்தைச் சேர்ந்த நிர்மாணிப்பு நிறுவனமாக பதிவு வழங்கப்பட்டுள்ளதுடன் மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிர்மாணிப்புச் செயலாற்றுகை பற்றிய விருதையும் இக்கூட்டுத்தாபனம் பெற்றுள்ளது.

ISO 9001:2008 தரச்சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ள இக்கூட்டுத்தாபனம் நிர்மாணிப்புகளை உரிய தரநியமங்களுக்கு அமைய மேற்கொண்டு வருகின்றது.

இக்கூட்டுத்தாபனம் பொறியியல் பணிகளுக்குத் தேவையான முன் வலுவூட்டப்பட்ட முன்பூர்த்தி செய்யப்பட்ட கொன்க்றீட் பாலங்கள், மின் கம்பங்கள், ஏனைய முன்பூர்த்தி செய்யப்பட்ட அம்சங்களையும் உற்பத்தி செய்கின்றது. அத்துடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சகல வீதி சமிஞ்கசக்

கட்டமைப்புக்களையும் பராமரித்தல் மற்றும் புதிய கட்டமைப்புக்களை உருவாக்கும் பணிகளையும் கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருகின்றது.

## 7.8 நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையாக மாற்றியமைக்கப்பட்டது. நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல், பதிவுசெய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்துவது இந்தச் சட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

இந்த சட்டத்தின் கீழ் நிர்மாணக் கைத்தொழிலுக்கு தேசிய சபையொன்றைத் தாபிப்பதற்கும், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தைத் தாபிப்பதற்கும், நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான தொழில் வல்லுநர்கள், உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கலைஞர்களின் அபிவிருத்தி மற்றும் நலன்புரிக்கான ஏற்பாடுகளைச் செற்வதற்கும் நிர்மாண நடவடிக்கைகள் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்துவைத்தல் மற்றும் இலங்கையில் நிர்மாணக் கைத்தொழில் துறையில் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் மற்றும் பணிகள் தற்போது நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்றன.

## 7.9 வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் 1971 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இதனையடுத்து 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வர்த்தக நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றியமைக்கும் சட்டத்தின் கீழ் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கம்பனிகள் சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட பொறுப்புகளைக் கொண்டு பொதுக் கம்பனியாக இந்தக் கூட்டுத்தாபனம் மாற்றியமைக்கப்பட்டது.

வீடமைப் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் துறைகளுக்குத் தேவையான தரமான கட்டிடப் பொருட்கள் மற்றும் நிர்மாணிப்பு உபகரணங்களை போட்டித்தன்மைமிக்க விலையில் நாடு முழுவதிலும் வழங்குகின்ற முன்னோடி அரச நிறுவனம் என்ற வகையில் சமூகப் பொறுப்பை நிறைவேற்றி இலங்கைச் சமுதாயத்தில் உச்சளவான நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் தமது நடவடிக்கைகளை வழிநடாத்திவருகின்றது.

## 7.10 ஓஷன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி

1996 ஜனவரி 01 ஆம் திகதி ஓஷன் வீவ் தனியார்க் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.

“செமட்ட செவண” 10 இலட்சம் வீடமைக்கும் தேசிய கொள்கைக்கு பலம் சேர்க்கும் அரச நிறுவனம் என்றவகையில் நம்பிக்கையும் பொறுப்பும்மிக்க தனியார் நிறுவனமொன்றாக வினைத்திறனை மையமாகக் கொண்டு இந்தக் கம்பனி வீடமைப்புச் சந்தையில் தெளிவான மாற்றமொன்றை ஏற்படுத்தி வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொடுக்க செயற்பட்டு வருகின்ற

# 2016ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சில அபிவிருத்திக் கருத்திட்டங்கள்




வாத்துவ சீ பிரீஸ் கருத்திட்டத்தை ஆரம்பித்துவைத்தல்




அத்துருகிரிய கிறீன்வெலி கருத்திட்டத்தை ஆரம்பித்துவைத்தல்




ராகம லாவன்யா ஹைட்ஸ் கருத்திட்டத்தை ஆரம்பித்துவைத்தல்



சொய்சாபுர மீளமைக்கும் கருத்திட்டம்



ஆலோகபுர வீடமைப்புத்திட்டம்



முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல்

# 8. நிதி ஏற்பாடுகள்

2016 ஆம் ஆண்டு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த நிதி ஏற்பாடுகள் மற்றும் மேற்படி நிதி ஏற்பாடுகளின் 2016.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் பின்வருமாறு.

## ❖ அமைச்சின் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 351,625,000 | 1,208,327,100 | 1,176,310,755 |
| மூலதனச் செலவினம் | 2,017,750,000 | 6,594,750,000 | 6,556,128,736 |
| | **2,369,375,000** | **7,803,077,100** | **7,732,439,491** |
| | | | |

## ❖ நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய

நிகழ்ச்சித்திட்டம் 1 – செயற்பாட்டு நடவடிக்கைகள்

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 243,625,000 | 595,327,100 | 574,926,775 |
| மூலதனச் செலவினம் | 8,750,000 | 45,750,000 | 10,175,600 |
| | **252,375,000** | **641,077,100** | **585,102,375** |
| | | | |

நிகழ்ச்சித்திட்டம் 2 – அபிவிருத்தி நடவடிக்கைகள்

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 108,000,000 | 613,000,000 | 601,384,000 |
| மூலதனச் செலவினம் | 2,009,000,000 | 6,549,000,000 | 6,545,953,136 |
| | **2,117,000,000** | **7,162,000,000** | **7,147,337,136** |
| | | | |

# அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| **விடய இல.** | 123011<br>123012 | | | |
| | | செலவின உச்ச வரையறை ரூ. | பெறுகைகளின் ஆகக் குறைந்த வரையறை ரூ. | வரவு நிலுவையின் உச்ச வரையறை ரூ. |
| **அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள்** | | 12,000,000 | 7,000,000 | 75,000,000 |
| | | | | |
| **ஆண்டின் ஆரம்ப மீதி (2016.01.01)** | | | 22,387,314 | |
| **ஆண்டினுள் மொத்த வரவு வைக்கப்பட்டவை** | | | | |
| | 123011 | 9,808,083 | | |
| | 123012 | 3,380,312 | 13,188,395 | |
| | | | | |
| | | | 35,575,709 | |
| **ஆண்டினுள் மொத்த செலவு வைக்கப்பட்டவை** | | | | |
| | 123011 | 5,778,955 | | |
| | 123012 | 6,215,610 | (-11,994,565) | |
| **ஆண்டின் இறுதி மீதி (2016.12.31)** | | | 23,581,144 | |

# 9. ஆண்டுக்குரிய அமைச்சின் முன்னேற்றம்

## 9.1. நிருவாகப் பிரிவு

### ❖ அமைச்சின் பதவியணி

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2016.01.01 ஆம் திகதியில் 182 ஆகும். 2016 ஆம் ஆண்டில் இந்தப் பதவியணிக்கு மேலதிகமாக சாரதி பதவிகள் 04, அலுவலக சிற்றூழியர் பதவிகள் 04, வீடியோ படப்பிடிப்பாளர் பதவி 01, புகைப்படக் கலைஞர் பதவி 01, புகைப்படக் கலைஞருக்கான உதவியாளர் பதவி 01 என்ற வகையில் புதிதாக 11 பதவிகளை அமைச்சுக்கு அங்கீகரித்துக் கொள்ள முடிந்ததுடன் இதற்கமைய மொத்த பதவிகளின் எண்ணிக்கை 193 ஆக அதிகரித்துள்ளது.

அமைச்சின் சிரேஷ்ட பதவிநிலை அலுவலர் வகுதிக்கு உரித்தான மேலதிக செலயாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) பதவி 2015 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், இந்த ஆண்டில் இதற்கு நிரந்தரமாக அலுவலர் ஒருவரை நியமனம் செய்துகொள்ள முடிந்தது. மேலும் 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் தேசிய வீடமைப்பு ஆணையாளர் பதவிக்கு அலுவலர் ஒருவரை நியமனம் செய்துகொள்ள முடிந்தது. அவ்வாறே பல வருடங்களாக வெற்றிடமாகக் காணப்பட்ட அமைச்சின் பிரதம நிதி அலுவலர் பதவிக்கு முழுநேர அடிப்படையில் பதில் கடமையாற்றுவதற்கு அலுவலர் ஒருவரை நியமனம் செய்ய முடிந்ததுடன், பிரதம கணக்காளர் பதவி வெற்றிடத்தையும் குறுகிய காலத்திற்குள் பூர்த்தி செய்துகொள்ள முடிந்தது.

2016 ஆம் ஆண்டில் அலுவலர்களின் இடமாற்றம் காரணமாக அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிருவாகம் மற்றும் நிதி) பதவியும், சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவியும், பணிப்பாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) மற்றும் அலுவலர்கள் ஓய்வுபெற்றதன் காரணமாக பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) பதவியும் வெற்றிடமானதுடன், ஆண்டின் இறுதிவரை மேற்படி பதவிகளுக்கு நிரந்தரமாக அலுவலர்களை இணைப்புச் செய்துகொள்ள முடியவில்லை. எவ்வாறாயினும், சேவையின் அவசியத்தன்மையைக் கவனத்தில் கொண்டு சிரேஷ்ட உதவிச் செயலளா் மற்றும் பணிப்பாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) ஆகிய பதவிகளில் பதில் கடமையாற்றுவதற்காக அலுவலர்களை நியமனம் செய்துகொள்ள உள்ளக வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டது. அத்துடன், இணைந்த சேவைக்கு உரித்தான அரச முகாமைத்துவ உதவியாளர் பதவி வெற்றிடங்கள் 15 இல் சுமார் 3 ஐ மாத்திரம் பூர்த்தி செய்து கொள்ள முடிந்ததுடன், சாரதி பதவி வெற்றிடங்கள் 04 இற்கு திறந்த ஆட்சேர்ப்பு மூலம் நியமனம் செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப தரங்களைச் சேர்ந்த அலுவலர்கள் உயிரிழந்தமை, இடமாற்றம் பெற்றமை, ஓய்வு பெற்றமை மற்றும் பதவி வெறிதாக்கியமை காரணமாக 2016 ஆம் ஆண்டின் இறுதியில் அமைச்சில் காணப்பட்ட ஒட்டுமொத்த பதவி வெற்றிடயங்களின் எண்ணிக்கை 38 ஆகும்.

### ❖ அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் பாராளுமன்ற வினாக்களும்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் விடயப்பரப்பிற்கு உரித்தான வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் நடவடிக்கைகள், அமைச்சின் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் பிரதான விடயப்பரப்புகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகள் சம்பந்தமாக 206 ஆம் ஆண்டில் இந்த அமைச்சினால் 43 அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் அமைச்சரவைக் குறிப்புகள் 09உம் சமர்ப்பிக்கப்படுள்ளன.

மேலும் அமைச்சின் மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் விடயப்பரப்பு சம்பந்தமாக 2016 ஆம் ஆண்டில் கேட்கப்பட்டிருந்த பாராளுமன்ற

அனைத்து வினாக்களுக்கும் பதில் அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேலும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் 08 கேள்விகள் இந்த ஆண்டில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவ் அனைத்து கேள்விகளுக்கும் பதில்கள் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

❖ **பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளுதல்**

இந்த அமைச்சின் விடயப்பரப்புக்கு அமைய பிரதானமாக பொதுமக்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது வீடமைப்புடன் சம்பந்தமான கோரிக்கைகள் தொடர்பிலாகும் என்பதுடன் ஜனாதிபதி அலுவலகம், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் பொது மனுக் குழு ஊடாக மற்றும் ஒம்புட்சுமன் ஊடாகவும் மேற்படி கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இவ் அனைத்துக் கோரிக்கைகள் தொடர்பிலும் உரிய பிரிவுத் தலைவர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களைத் தொடர்புகொண்டு இதில் தலையீடு செய்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமைச்சு தாமதிக்காது செயற்பட்டுள்ளதுடன், அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பிலான கோரிக்கைகள் சம்பந்தமாக நிறுவனத் தலைவர்கள் ஊடாக தகவல்களைப் பெற்று விண்ணப்பதாரர்களுக்கு பதில் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அமைச்சு, அதன் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் அலுவலர்கள், ஊழியர்கள் தொடர்பிலான தொழில்சங்க மற்றும் தாபனச் சிக்கல்களுக்கு அமைச்சின் சிரேஷ்ட பதவி நிலை அலுவலர்களின் தலைமையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடி விளைதிறன்மிக்க தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ **பயிற்சி மற்றும் உற்பத்தித் திறன் செயற்பாடுகள்**

அமைச்சினால் பொது நிருவாக, கணக்கு நடவடிக்கைகள், தாபன நடவடிக்கைகள், உற்பத்தித்திறன் செயற்பாடுகள், ஆளுமை அபிவிருத்தி மற்றும் திறன் விருத்தி போன்ற இனங்காணப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பதவி நிலை அலுவலர்கள் உள்ளடங்களாக பல்வேறு அலுவலர் தொகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் அலுவலர்கள் பங்கேட்கச் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதுடன் அமைச்சின் ஒட்டுமொத்த பதவியணிக்கும் மனப்பாங்கு அபிவிருத்திச் செயலமர்வு, உற்பத்தித்திறன் பயிற்சிச் செயலமர்வு மற்றும் ISO அறிமுகம் செய்யும் செயலமர்வு ஆகியவற்றை 2016 ஆம் ஆண்டில் நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
அத்துடன் அமைச்சின் அலுவலர்கள் விடயாீதியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதுடன், 2016 ஆம் ஆண்டில் அவ்வாறு உள்நாட்டில் பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை 22 ஆகும் என்பதுடன், வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை 4 ஆகும்.

மேலும் அரசாங்க நிறுவனங்களின் தகவல் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய பாடநெறியை பயில்கின்ற பயிலுனர்கள் 22 பேருக்கு 2016 ஆம் ஆண்டில் அமைச்சினால் பயிற்சி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

❖ **நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்பு அலகைத் தாபித்தல்**

நடுத்தர வருமானம் பெறுகின்ற அரச மற்றும் அரசசார்பற்ற ஊழியர்களுக்காக வீடுகளை நிர்மாணிக்கின்ற துரித நிகழ்ச்சித்திட்டதை மென்மேலும் வினைத்திறனுடன் அமுல்படுத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலகொன்று அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது. இதற்கு 14 பேர் கொண்ட பதவியணியை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினூடாக அங்கீகரித்துக் கொள்ள அமைச்சு நடவடிக்கை

மேற்கொண்டதுடன், 2016 ஆம் ஆண்டு நிறைவடைய முன்னர் கருத்திட்டப் பணிப்பாளர் உள்ளிட்ட 03 பதவிகளுக்கு பகிரங்க அறிவித்தல்களை வெளியிட்டு அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். ஏனைய பதவிகளுக்கு விண்ணப்பம் கோருவது 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை 2017 இன் முதல் காலாண்டில் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ❖ வாகனங்களை அகற்றல்

2016 ஆம் ஆண்டில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அசைம்சுக்கு உரித்தானதாகக் காணப்பட்ட உபயோகத்திலிருந்து நீக்கப்பட்டிருந்த 6 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் மூலம் ரூ.மி. 7.59 இற்கும் அதிகமான தொகையை திறைசேரிக்கு மாற்றல் செய்யும் ஆற்றல் கிடைத்தது.

## 9.2 திட்டமிடல் பிரிவு

### ❖ வருடாந்த செயற்றிட்டம் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

ஒவ்வொரு வருடமும் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் சம்பந்தமான செயற்பாடுகளையும் மதிப்பீடுகளையும் உள்ளடக்கியதாக வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்படுவதுடன், 2016 ஆம் ஆண்டுக்காக அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்கள் சம்பந்தமான வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்பட்டது.

வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படுவதை அவதானித்தல் மற்றும் மதிப்பீடு செய்யவென கௌரவ அமைச்சரின் தலைமையில் வீடமைப்புத் துறைக்கான 38 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நிர்மாணத் துறைக்கான 29 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் என்ற வகையில் 2016 ஆம் ஆண்டில் 67 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அத்துடன் அமைச்சின் செயலாளரின் தலைமையில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறையை உள்ளடக்கும் வகையில் முறையே முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 16 மற்றும் 11 இனை நடாத்த அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டது.

இதன் மூலம் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் உத்தேச இலக்குகளை பூர்த்தி செய்துகொள்ள அவசியமான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொடுக்க முடிந்தது.

### ❖ முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் கருத்திட்டப் பிரேரணைகள்

வருடாந்த செயற்திட்டத்திற்கமைய காலாண்டு அடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் 4 முன்னேற்ற அறிக்கைகள் தயார் செய்யப்பட்டதுடன் அவை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அவ்வாறே கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினாலும் கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் கண்காணிப்புச் செய்யப்படுவதடன், அது சம்பந்தமான 4 முன்னேற்ற அறிக்கைகள் அமைச்சினால் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை சனாதிபதி செயலகத்திற்கு காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலம் 2017 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங் களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை சம்பந்தமாக அமுல்படுத்த திட்டமிட்டுள்ள 26 கருத்திட்டப் பிரேரணைகளை திரைசேரியிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க முடிந்துள்ளது.

### ❖ அமைச்சின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை

ஒவ்வொரு வருடமும் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் போது

சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை இந்த ஆண்டும் அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் கருத்திட்டப் பிரேரணைகள், திட்டங்களுடன் தயார் செய்யப்பட்டு உரிய நேரத்திற்குள் சமர்ப்பிக்க அமைச்சு செயற்பட்டது.

இதற்கு மேலதிகமாக சனாதிபதி செயலகத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற 4 சனாதிபதி செயலணிகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை இந்த அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற மாதிரிக் கிராமங்களில் அமுல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 9.3 வீடமைப்புப் பிரிவு

❖ **உலகக் குடியிருப்புத் தினம்**

1985ஆம் ஆண்டில் மேற்கிந்திய தீவுகளில் ஜெமைக்காவின் கிங்ஸ்டன் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித குடியிருப்பு ஆணைக்குழு கூட்டத்தொடருக்கு அப்போதைய பிரதமர் அமரர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் பிரகடனம் செய்யப்பட்ட "உலக குடியிருப்பு தினம்" 1986ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக வீடமைப்பு மற்றும் குடியிருப்பு துறை சம்பந்தமான பல்வேறு தொனிப்பொருள்களின் கீழ் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமையை உலக குடியிருப்பு தினமாக கொண்டாடி வருவதுடன் இது இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 03ஆந் திகதி கொண்டாடப்பட்டது. இந்த சர்வதேச தினத்தை முன்னிட்டு வீடமைப்பு மற்றும் குடியிருப்புத்துறையில் மிகவும் பயன்வாய்ந்த நிகழ்ச்சித்திட்டமாக அமுல்படுத்தும் நோக்கத்துடன் மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி இது அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

உலக குடியிருப்பு தினத்தின் 30வது கொண்டாட்ட நிகழ்வு "வீடமைப்பு மயமாக்கலை முன்னிலைப்படுத்தல்" எனும் தொனிப்பொருளின் கீழ் இம்முறை பொலன்னறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்றது. இதன்போது 24 வீடுகளை உள்ளடக்கிய "சுகலாதேவிகம" எனும் புதிய மாதிரிக் கிராமம் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களினால் பயனாளிகளான சமுதாயத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு "விசிறி வீடமைப்புக்கடன்", சீமெந்து உதவிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வீடமைப்பு உதவியைப் பெற்றுக்கொடுத்தல், சில்பசவிய இன் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மாவட்டப் பயிலுநர்களுக்கான தொழில்சார் உபகரணங்கள், சீருடைகள், உதவிகையேடுகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினால் மேன்மை தங்கிய ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கமைய ஆரம்பிக்கப்பட்ட "சீறுநீரக தேசிய நிதியம்" இற்கு ஒரு மில்லியன் ரூபாவை அன்பளிப்புச் செய்வதும் இடம்பெற்றது.

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் சிறுநீரக நோயாளர்கள் பரவலாக வாழும் இந்த மாவட்டத்தின் தமன்கடுவ பிரதேச செயலகத்தில் பதிவுசெய்துள்ள 76 பாலர் பாடசாலைகளின் மாணவர்களுக்கு குடிநீரை பாதுகாப்பாக பயன்படுத்தும் பொருட்டு நீர் சுத்திகரிப்பு செய்வதற்கான வசதிகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதனை முன்னிட்டு குறைந்த வசதிகளைக் கொண்ட நகரக்குடியிருப்புகளில் வாழும் சிறுவர்களின் ஆக்கபூர்வமான திறமைகளை மேம்படுத்தும் பொருட்டு மற்றும் மனிதக் குடியிருப்பு துறைகள் தொடர்பில் சமுதாயத்தின் புரிந்துணர்வை

வளர்ப்பதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.




❖ **தேசிய வீடமைப்புக் கொள்கையை மறுசீரமைத்தல்**

தற்போதைய அரசாங்கத்தின் நோக்கை வெளிப்படுத்தும் வகையில் நகரமயமாக்கல், இயற்கை அனர்த்தங்களின் தாக்கங்கள், நிலையான மனிதக் குடியிருப்பு அபிவிருத்தி எண்ணக்கருக்களை அமுல்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு தேசிய வீடமைப்புக் கொள்கையை மறுசீரமைப்பதற்கு 2016 ஜூலை 07ஆந் திகதி அமைச்சரவைக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்கான அங்கீகாரம் 2016.07.12ஆந் திகதி கிடைத்துள்ளது. இதற்கமைய மனித குடியிருப்பு பற்றிய நிபுணர்களை உள்ளடக்கிய தொகுப்பாசிரியர் சபையின் மூலம் தேசிய வீடமைப்புக் கொள்கையை திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இற்றைப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கொள்கையை 2017 ஆண்டில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



❖ **செமட்ட செவண (யாவருக்கும் புகலிடம்) தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பிரதானமாகக் கொண்ட சர்வதேச செயற்பாடுகள்**

2016 ஆம் ஆண்டு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு விடமைப்பு மற்றும் குடியிருப்புமயமாக்கல் பற்றிய



சர்வதேச பணிகள் பலவற்றுக்கு தமது பங்களிப்பை வழங்கியது. 20 வருடங்களுக்கு ஒரு தடவை ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு ஆணைக்குழுவின் பங்களிப்புடன் நடாத்தப்படுகின்ற ஹெபிடாட் iii சர்வதேச மாநாட்டுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற இலங்கையின் தேசிய அறிக்கையைத் தயார் செய்வதானது வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் வழிகாட்டலின் கீழ் அதற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் உதவியுடன் வீடமைப்பு மற்றும் குடியிருப்புமயமாக்கல் துறையின் தொழில்வல்லுனர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு மேலதிகமாக இந்த சர்வதச மாநாட்டுக்காக நடாத்தப்பட்ட முன்ஆயத்தப்படுத்தும் இரண்டு மாநாடுகள் அமெரிக்காவின் நியுயோர்க் மற்றும் இந்துனீசியாவின் சுரபயா நகரில் நடைபெற்றன. இதில் இலங்கைப் பிரதிநிதிகள் குழு கலந்துகொண்டு ஹெபிடாட் iii சர்வதேச மாநாட்டை ஒழுங்குசெய்வதற்கான தமது பங்களிப்பை வழங்கியது.

2016 அக்டோபர் மாதம் ஹெபிடாட் iii சர்வதேச மாநாடு இக்வடோரின் குவிடோ நகரில் நடைபெற்றதுடன், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர் கௌரவ இந்திக்க பண்டார அவர்களின்

தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் குழு இந்த மாநாட்டில் கலந்துகொண்டது.

புதிய நகர நிகழ்ச்சிநிரலுக்கு அமைவான வீடமைப்பு மற்றும் நிலையான நகர அபிவிருத்தி" எனும் தலைப்பில் இந்த இருதசாப்த மாநாடு நடாத்தப்பட்டதுடன், இதன் போது இலங்கைப் பிரதிநிதிகள் குழுவினால் ஹெபிடாட் ii சர்வதேச மாநாடு துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடாத்தப்பட்ட போது கடந்த 20 வருட காலப்பகுதிக்குள் இலங்கை மற்றும் பிராந்தியத்தில் அமுல்படுத்தப்பட்ட வீடமைப்பு மற்றும் குடியிருப்புமயமாக்கல் பணிகள் மற்றும் ஹெபிடாட் iii சர்வதேச மாநாட்டின் செயற்பாடுகள் பற்றிய விளக்கமளிக்கப்பட்டது.

பங்கேற்பு வீடமைப்பு அபிவிருத்தியை மையமாகக் கொண்டு இலங்கையில் அமுல்படுத்தப்படுகின்ற வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்திப் பணிகள் பற்றி இந்த மாநாட்டில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், நகர மற்றும் கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகளில் காணப்படுகின்ற முரண்பாடுகளைக் குறைத்தல், வீடமைப்பு மற்றும் குடியிருப்புமயமாக்கலின் நிதி முகாமைத்துவம் போன்ற பணிகள் தொடர்பாக இந்த மாநாட்டில் நீண்டி நேரம் ஆராயப்பட்டது.




ஆசிய, பசுபிக் வீடமைப்பு அமைச்சர்களின் மாநாடு 2016 டிசம்பர் மாதம் இந்தியாவின் புதுடில்லி நகரில் நடைபெற்றது. இதில் இலங்கைப் பிரதிநிதிகள் குழு பங்கேற்றதுடன், மாநாட்டின் பிரதான ஐந்து செயல்ரீதியான குழுக்களில் ஒன்று இதன் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது.

2017 ஆம் ஆண்டு 1987 சர்வதேச வீடமைப்பு ஆண்டின் 30 ஆவது ஆண்டு நிறைவுக்கான வருடமாகும். மேற்படி 30 ஆவது கொண்டாட்டத்தை முன்னிட்டு இலங்கையில் அமுல்படுத்தப்படுகின்ற யாவருக்கும் புகலிடம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக சர்வதேச கவனத்தைக் கோருவதை நோக்காகக் கொண்டு சர்வதேச வீடமைப்பு மாநாட்டை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி மாநாட்டுக்கான முன்ஆயத்த செயற்பாடுகள் பல இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ❖ மாவட்ட, பிரதேச, கிராமிய வீடமைப்புக்குழுக்களை தாபித்தல்

யாவருக்கும் புகலிடம் (செமட்டசெவன) தேசிய வீடமைப்பு நிகழ்ச்சிட்டம் உள்ளடங்கலாக நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படுகின்ற சகல வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் கிராமிய, பிரதேச, மாவட்ட மட்டத்தில் திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கும் வீடமைப்புமயமாக்கலில் ஈடுபட்டுள்ள சகல நிறுவனங்கள், அமைப்புக்களின் உதவியுடன் உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதாரம் உள்ளடங்களாக சமூக, பொருளாதார அபிவிருத்திக்காகவும் மாவட்ட, பிரதேச, கிராமிய வீடமைப்பு குழுக்களை தாபிப்பதற்கு அமைச்சரவைக் குறிப்பொன்று 2016.06.22ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து இதற்கு 2016.06.28ஆந் திகதி நிதி விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளுக்கு உட்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### ❖ பம்பலப்பிட்டி தொடர்மாடி வீடமைப்புத்திட்டங்களை மீள்அபிவிருத்தி செய்தல்

பம்பலப்பிட்டி தொடர்மாடி வீடமைப்புத் திட்டமென பிரபல்யமடைந்துள்ள நடுத்தர வருமானம் பெறுவோருக்கான இருப்பிடக்கூறுகள் வீடமைப்புத்திட்டம் 1960 ஆம் தசாப்தத்தின் ஆரம்பத்தில்

பம்பலபிட்டியில் உயர் பெறுமதிமிக்க காணிப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டது. மேற்படி கட்டிடங்கள் 65 வருடங்களுக்கும் மேல் பழைமைவாய்ந்ததும், மீள்அபிவிருத்தி செய்யாது உயிர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி பல வருடங்களுக்கும் மேலாக அழிவடைந்து வருகின்றது. மேலும் இதனைச் சூழ்ந்ததாக துரித நகர அபிவிருத்தி இடம்பெற்றுள்ளதானல், இதனை மீள்அபிவிருத்தி செய்யவில்லை எனின், நவீன அபிவிருத்திக்கு மத்தியில் இது வளர்ச்சியடையாத வீடுமைப்புத்திட்டமாக மாற்றமடைய முடியும்.

அதற்கமைய, கூட்டாட்சி உரிமையாளர்களின் உரித்து உரிமையை உறுதி செய்து உயர் வருமான உருவாக்க நகர்ப்புறப் பிரதேசமாக முதலீட்டு சபையினால் தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர் ஊடாக பம்பலப்பிட்டி தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தை அபிவிருத்தி செய்து அமுல்படுத்தும் பல்வேறு கட்டங்களின் ஊடாக கருத்திட்டத்திற்கு வழிகாட்டுவதற்கு பல்வித நிறுவனங்களின் நடவடிக்கைக் குழுவும் நியமனம் செய்யப்பட்டது.

மீள்அபிவிருத்த பிரேரணை பற்றியும், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற வீட்டுவசதிகள் தொடர்பாகவும் விளக்கமளிப்பதற்கு நடவடிக்கைக் குழுவின் ஆலோசனையின் பேரில் பம்பலப்பிட்டி தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களிலுள்ள சகல முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களுடனும் நீண்ட கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. இந்தக் கலந்துரையாடல்கள் வசிப்பாளர்களுடன் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வருவதுடன், மேற்படி வசிப்பாளர்களின் பிரேரணைக்கு அமைய திட்டங்களில் மாற்றங்களும் செய்யப்படுகின்றன.

### ❖ 1972 இன் 07 ஆம் இலக்க வீட்டு வாடகை சட்டத்தின் ஒழுங்குவிதிகளை திருத்தியமைத்தல்

2016 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 1978/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த சட்டத்தின் 43 ஆம் பிரிவுக்கு ஏற்புடைய புதிய விடயங்கள் இரண்டு இணைக்கப்பட்டு மேற்படி அட்டவணை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. மேற்படி புதிய விடயங்கள் இரண்டும் பின்வருமாறாகும்.

“5. யாதாயினும் ஒரு வளவின் உரிமையாளர், தேசிய அரசுப் பேரவையின் 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் அல்லது வேறு சட்டமொன்றின் கீழ் பதிவு செய்துள்ள கூட்டுறவுச் சங்கமொன்று அல்லது அரச அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது பகுதியளவிலான அரச அதிகார சபை அல்லது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள கம்பனியாக உள்ள பட்சத்தில் இந்த சட்டத்தின் பணிக்கு நீக்கப்பட்டுள்ள வளவாக இருத்தல் வேண்டும்.

6. யாதாயினுமொரு வளவில் வாடகை குடியிருப்பாளர், உள்ளூராட்சி மன்றம், தேசிய அரசுப் பேரவையின் 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் அல்லது வேறு சட்டமொன்றின் கீழ் பதிவு செய்துள்ள கூட்டுறவுச் சங்கமொன்று அல்லது அரச அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது பகுதியளவிலான அரச அதிகார சபை அல்லது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள கம்பனியாக உள்ள பட்சத்தில் இந்த சட்டத்தின் பணிக்கு நீக்கப்பட்டுள்ள வளவாக இருத்தல் வேண்டும்.

மேற்படி ஒழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதை அடுத்து 2016.11.26 ஆம் திகதி பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

### ❖ வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு தேசிய அபிவிருத்திச்

செயற்பாட்டில் வீடமைப்புத் துறையில் பாரியதொரு புத்தெழுச்சிக்குத் தேவையான பின்னணியை மீண்டும் உருவாக்கி வருகின்றது. இதற்காக 2015 ஆம் ஆண்டில் ரூ.மில். 3.702 ஆன ஏற்பாடுகளைப் பயன்படுத்தி மாதிரிக் கிராமங்களை நிர்மாணித்தல், விசிறி வீடமைப்பு அபிவிருத்தி, வீடுகளுக்கு சாந்து பூசும் நிகழ்ச்சித்திட்டம் போன்ற பல்வேறு வீடமைப்பு நிர்மாணிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்தியுள்ளது. மேற்படி வெற்றிகரமான நிலைமை காரணமாக 2016 ஆம் ஆண்டு வீடமைப்பு அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தவதற்கு இந்த அமைச்சுக்கு ரூ.மி. 5.8 ஆன ஏற்பாடுகள் உரித்தாகின. மேற்படி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி பல்வேறு வகையிலான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் அமுல்படுத்தும் ஆற்றல் அமைச்சுக்குக் கிடைத்ததுடன், அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை, கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை போன்ற நிறுவனங்கள் இப்பணியின் போது பாரியளவிலான செயற்பணிகளை நிறைவேற்றியுள்ளது.

அதற்கமைய விசிறி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம், உதாகல கம்மான நிகழ்ச்சித்திட்டம், சிறுநீரக நோயாளர் குடும்பங்களுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், மணலாறு விசேட வீடமைப்புக் கருத்திட்டம், நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம் மற்றும் லூனவ வீடமைப்பு கருத்திட்டம் 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்துதப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் சிலவாகும்.

- **மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம்**

சொந்தக் காணி மற்றும் வீடு இல்லாத குடும்ப அலகுகளை இலக்காகக் கொண்டு 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம் நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த அமைச்சின் வழிகாட்டலின் கீழ் 2016 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்படுத்தப்பட்டது.

அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் இலக்காகக் கொள்ளப்பட்ட 4500 வீட்டு அலகுகளையும் தாண்டி திறைசேரி நிதியை மாத்திரம் பயன்படுத்தி புதிய மாதிரிக் கிராமங்கள் 147 இல் 4641 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், செவண உதவியின் கீழ் பதிய மாதிரிக் கிராமங்கள் 41 இல் 896 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பிக்கவும் முடிந்தது. அதற்கமைய புதிய 5537 வீடுகளை நிர்மாணிப்பது இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டத்திற்குச் செலவிடப்பட்ட ஒட்டுமொத்த தொகை ரூபா மில்லியன் 1100.072 ஆகும்.



மேலும் 2015 ஆம் ஆண்டு நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்ட மாதிரிக் கிராமங்கள் 38 இல் 15 கிராமங்களை கௌரவ அமைச்சரின் தலைமையில்இந்த ஆண்டில் மக்களிடம் கையளிக்க முடிந்தது.

இதற்கு மேலதிகமாக, இலங்கையில் வாழும் வறிய மக்களின் வீடமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நாடு முழுவதிலும் ஒரு மாவட்டத்திற்கு நிலைபேறான மாதிரிக் கிராமங்கள் 20 வீதமான 500 வீடமைப்புக் கருத்திட்டங்களை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு மேன்மைதங்கிய சனாதிபதி மற்றும்

கௌரவ வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரினால் 2016.09.30 ஆம் திகதியைக் கொண்ட கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது. மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை எதிர்காலத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- **மணலாறு விசேட வீடமைப்புக் கருத்திட்டம்**

மூன்று தசாப்தத்திற்கும் மேல் இந்நாட்டில் நிலவிய இனரீதியான மோதல்கள் காரணமாக தமது வீடுகளை இழந்துள்ள முல்லைத்தீவு மாவட்டதின் மணலாறு பிரதேசத்தைச் சேர்ந்த வீட்டு உரிமையாளர்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் தற்போதுள்ள வீடுகளை மேம்படுத்துவதற்கு விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிக்கும் ஆற்றல் இந்த ஆண்டில் கிடைத்தது. இதன் கீழ் 1084 வீடுகளை நிர்மாணிப்பது ஆரம்பிக்கப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டின் இறுதியில் இதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூபா மில்லியன் 310.845 ஆகும்.

- **விசிறி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தற்போதுள்ள கிராமங்களின் தற்காலிக வீடுகள் மற்றும் உபகுடும்பங்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்தல், பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளை மேம்படுத்தல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ் புதிய வீடொன்றுக்கு ரூபா 300,000 ஆன உச்சளவிற்கு உட்பட்ட கடன் தொகை மற்றும் மேம்படுத்தப்பட வேண்டிய ஒரு வீட்டுக்கு உச்சளவாக ரூபா 200,000 வரையான கடன் தொகை நிவாரண வட்டி அடிப்படையில் வழங்குவது இடம்பெறுவதுடன், வீடுகளை நிர்மாணிக்கத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு விடயத் துறைகளை உள்ளடக்கும் வகையில் உப நிகழச்சித்திட்டங்கள் பல அமுல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் விதவைகளுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உதாகல கம்மான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆகியன விசேடமானவையாகும்.

2016 ஆம் ஆண்டில் விசிறி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 26000 வீடுகளை அபிவிருத்தி செய்ய இலக்காகக் கொள்ளப்படட்துடன், ஆண்டின் இறுதியில் 35987 வீடுகளை அபிவிருத்தி செய்யும் ஆற்றல் கிடைத்தது. இது இலக்காகக் கொள்ளப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையையும் தாண்டிச் சென்றதாக உள்ளது. இதற்காக செலவிடப்பட்ட ஒட்டுமொத்த தொகை ரூபா மில்லியன் 3697.33 ஆகும்.



- **சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மற்றும் வறிய குடும்பங்களுக்கான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சிட்டம்**

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் வறிய குடும்பங்கள், பொருளாதார மற்றும் சமூக அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளமை ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டதை அடுத்து அவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான விசேட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமுல்படுத்த மேன்மைதங்கிய ஜனாதிபதியுடன் கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று 2016 ஜூன் மாதம் 06ஆந் திகதி

சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது.

இதன் மூலம் ஒரு குடும்பத்திற்கு ரூபா 5 இலட்சம் எனும் உச்சளவுக்கு உட்பட்டு உதவித் தொகைகள் வழங்கப்படுவதுடன், மேற்படி நிதிப் பங்களிப்புக்கு மேலதிகமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உதவியுடன் மேற்படி வீடுகளை நிர்மாணித்துக் கொள்ளத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. அதற்கமைய, நாட்டின் இனங்காணப்பட்ட சில மாவட்டங்களில் 2016 ஆம் ஆண்டு முழுவதிலும் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதன் கீழ் 700 வீடுகளை நிர்மாணிக்கும் ஆற்றல் கிடைத்ததுடன், செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா மில்லியன் 74.56 ஆகும்.






- **வீடுகளை புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அல்லது முறையாக பூர்த்தி செய்யப்படாதுள்ள பல வீடுகள் நாடு முழுவதிலும் பரந்துள்ளதுடன், மேற்படி வீடுகளை முறையாக மறுசீரமைத்துக் கொள்ளத் தேவையான சீமேந்து உதவிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டில் 75,000 வீடுகளை புனரமைப்பதற்கு சீமேந்து உதவிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்படுத்தப்பட்டது.

நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன், உத்தேச வீட்டு அலகுகளான 75,000 இல் 71,598 வீடுகளை புனரமைக்கும் பணிகளை நிறைவு செய்யும் ஆற்றல் இந்த ஆண்டில் கிடைத்ததுடன் இது 95.33% ஆன விகிதமாகும். இதற்கு முதலீடு செய்யப்பட்ட தொகை ரூபா மில்லியன் 641.013 ஆகும்.

❖ **நடுத்தர வருமான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம்**

கடந்த சில தசாப்தங்களாக அமுல்படுத்தப்பட்டு வந்த வீடமைப்பு அபிவிருத்திக்கான அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்களில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடுகளை பெற்றுக்கொடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி எண்ணக்கருவை மாற்றியமைத்து கௌரவ பிரதம அமைச்சரினால் 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது வெளியிடப்பட்ட விஞ்ஞாபனத்திலுள்ள வாக்குறுதியை அமுல்படுத்தும் வகையில் நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றை 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கும் ஆற்றல் இந்த அமைச்சுக்குக் கிடைத்தது.

அதற்கமைய இந்தத் துரித நிகழ்ச்சித்திட்டம் தனியார் மற்றும் அரச துறையின் பங்கேட்புடன் கூட்டாக அமுல்படுத்தப்படுவதுடன், இதன் மூலம்

நடுத்தர வகுப்பினருக்கு, அரச துறை மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் வீடுகளைக் கொள்வனவு செய்ய வாய்ப்புக்கள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. இந்த வீடமைப்புத் திட்டங்களை, சகல உட்கட்டமைப்பு வசதிகளுடனும், நாட்டின் உப நகரங்களை மையமாகக் கொண்டுள்ள அரசுக்கு உரித்தான காணிகளில் நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டில் இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நடுத்தர வகுப்பினருக்கான 4 வீடமைப்புக் கருத்திட்டங்களின் வேலைகளை ஆரம்பிக்கும் ஆற்றல் அமைச்சுக்குக் கிடைத்தது. 196 வீடுகளைக் கொண்ட “சீ பிரீஸ்” வீடமைப்புக் கருத்திட்டம், 352 வீடுகளைக் கொண்ட அத்துருகிரிய – பனாகொட “கிறீன் வெலி” வீடமைப்புக் கருத்திட்டம், 124 வீடுகளைக் கொண்ட ராகம லாவன்ய ஹைட்ஸ் வீடமைப்புக் கருத்திட்டம், 860 வீடுகளைக் கொண்ட ஹோமாகம மவுன்ட் கிளிபர்ட் ரேன்ஜ் வீடமைப்புக் கருத்திட்டம் ஆகியன இந்த ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்படட் வீடமைப்புக் கருத்திட்டங்களாகும்.

❖ **காணி / வீடுகளுக்கான உறுதிகளைப் பெற்றுக் கொடுத்தல்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 8(1) உட் பிரிவுக்கு அமைய காணிகள் / வீடுகளின் சட்டபூர்வமான உரித்த நீக்கம் செய்வது இடம்பெறுவதுடன், இந்த ஆண்டில் இலக்காகக் கொள்ளப்பட்ட காணிகள் / வீடுகளின் உறுதிகள் 3000 இல் ஆண்டின் இறுதிக்குள் 1851 உறுதிகளை விடுவிக்க அமைச்சுக்கு ஆற்றல் கிடைத்ததுடன் இது 61.7% ஆன விகிதமாகும். இதற்கு மேலதிகமாக இலக்காகக் கொள்ளப்பட்ட 2000 குத்தகை உறுதிகளையும் தாண்டிச் சென்று 7599 குத்தகை உறுதிகளைப் பெற்றுக்கொடுக்கும் ஆற்றல் இந்த ஆண்டில் கிடைத்தது.

❖ **கூட்டாட்சி ஆதனங்களுக்கான சான்றிதழ்களை வெளியிடல், முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் குழுக்களைப் பதிவு செய்தல்.**

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபையினால் கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பிலான சான்றிதழ்களை வெளியிடும் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், கூட்டாட்சி ஆதனங்களின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் குழுக்களை பதிவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய இந்த இலக்காகக் கொள்ளப்பட்ட பூரணமான, பகுதியளவிலான மற்றும் தற்காலிக கூட்டாட்சிச் சான்றிதழ்களை வெளியிடுவது 102 ஆக இருந்ததுடன், ஆண்டின் இறுதிக்குள் இச்சான்றிதழ்களை வெளியிட வாய்ப்புக் கிடைத்தமையானது விசேட அம்சமாக உள்ளது. மேலும் இலக்கு முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைப் பதிவு செய்தல், பதிவைப் புதுப்பித்தல் மற்றும் செயலிழந்துள்ள முகாமைத்துவக் குடுக்களை மீளத் தாபித்தல் 825ஆக இருந்ததுடன், ஆண்டினுள் 579 எனும் விசேட முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. இது 70 சதவீதமாகும்.

❖ **வீடமைப்புத் தேவை பற்றிய தரவுகளை சேகரிக்கும் ஆய்வு**

இலங்கையின் தற்போதைய வீடமைப்புத்தேவை பற்றி சரியான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் இல்லாமையினால் தேசிய வீடமைப்புத்தேவையை பூர்த்திசெய்வது தொடர்பான கொள்கைசார் தீர்மானங்களை தயார்செய்யும்போதும் திட்டமிடும்போதும் அமைச்சு சிக்கல்களை எதிர்நோக்குகின்றது. நாட்டின் வீடமைப்புத்தேவை பற்றி பல்வேறு வழிமுறைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற தரவுகளும் தகவல்களும் ஒன்றுக்கொன்று முரண்படுவதனாலும் மேற்படி தரவுகள்

காலங்கடந்ததாக உள்ளதனாலும் மேற்படி தரவுகள் மற்றும் தகவல்கள் தற்கால வீடமைப்புத் தேவைகளின் உண்மையான தன்மையை வெளிப்படுத்துவதாக காணப்படுவதில்லை. 2011 ஆம் ஆண்டு நிரந்தர வீடமைப்புத் தேவை 15 இலட்சம் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வுக்கு அமைய இது 6.0 இலட்சமாக குறைவடைந்துள்ளது. அதற்கமைய தகவல்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றமை தெரியவருகின்றது.

இதனால் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் வீடமைப்புத்தேவை பற்றிய தரவுகளை சேகரிப்பதற்கான ஆய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்களின் அலுவலர்களது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை கௌரவ அமைச்சரினால் 2016.05.09ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு 2016.05.25ஆந் திகதிய அமைச்சரவையின் அங்கீகாரமும் இதற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த வீடமைப்புத் தேவைகள் பற்றிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் பிரதான பிரச்சினையொன்றாக காணப்படுகின்ற தேசிய வீடமைப்புத்தேவையை பூர்த்தி செய்வதற்கான நீண்டகால நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை தயார்செய்வதற்கு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

தற்போது நாட்டின் பிரதேச செயலாளர் பிரிவுகள் அனைத்தும் தமது பிரிவில் காணப்படுகின்ற வீடமைப்புத் தேவை பற்றிய தரவுகளை வழங்கியுள்ளதுடன் அவ்வாறு கிடைத்துள்ள மொத்த வீட்டுத் தேவை பற்றிய தரவுப் பொழிப்பு பின்வருமாறு.

| ;எழுத்து | வீடமைப்புத் தேவை | குடும்பங்கள் |
|---|---|---|
| A | தற்காலிக வீடுகள் | 278,319 |
| B | தென்னை ஓலை வேயப்பட்ட வீடுகள் | 44,413 |
| C | கூரைத்தகடு பொருத்திய வீடுகள் | 441,891 |
| D | சாந்துபூச வேண்டிய வீடுகள் | 839,029 |
| E | குதியளவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் | 384,912 |
| F | வீடுகள் நிர்மாணிக்க காணி இல்லாத, வீடு இல்லாத குடும்பங்கள் | 215,604 |
| G | வீடுகளை நிர்மாணிக்க காணி உள்ளதுடன், வீடுகள் இல்லாத குடும்பங்கள் | 166,567 |
| H | வேறு பிரதேசமொன்றில் வசிக்கின்ற தற்காலிகமாக வாடகை / குத்தகைக்கு வந்துள்ள குடும்பங்கள் | 79,562 |
| I | நிரந்தர வசிப்புக்கு வந்துள்ள வாடகை / குத்தகைக்கு வந்துள்ள குடும்பங்கள் | 83,520 |
| J | தற்காலிக தொழிலுக்காக உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் உள்ள குடும்பங்கள் | 29,832 |
| A-J வரை கூட்டுத்தொகை | | 2,563,649 |
| | உட்கட்டமைப்பு வசதிகளை் செய்துகொடுத்தல் | |
| K | மின்சாரம் இல்லாதவை | 167,252 |
| M | வீதி வசதிகள் இல்லாதவை | 180,062 |
| N | துப்பரவேற்பாட்டு வசதிகள் இல்லாதவை | 194,308 |
| O | சுத்தமான குடிநீர் இல்லாதவை | 510,757 |
| K-O வரை கூட்டுத்தொகை | | 1,052,379 |









## 9.4. தொழில்நுட்பப் பிரிவு

### ❖ நிர்மாணிப்பு பற்றிய தேசிய கொள்கை

2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணிப்பு தொடர்பான தேசிய ஆலோசனை சபையினால் நிர்மாணிப்பு பற்றிய தேசியக் கொள்கை தயார் செய்யப்பட்டது. அவ்வாறு தயார் செய்யப்பட்ட தேசிய கொள்கையில் அரச மற்றும் நிர்மாணக் கைத்தொழில் தரப்பினர்களான நிறுவனங்கள் அமுல்படுத்த வேண்டிய பதினெட்டு (18) நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நிர்மாணம் தொடர்பான தேசிய கொள்கையின் நோக்கமாக இருப்பது ஒழுங்குபடுத்தல், தரப்படுத்தல், திறன்விருத்தி மற்றும் வசதிகளை செய்துகொடுப்பதன் மூலம் தேசிய அபிவிருத்தித் தேவைகளை நிறைவு செய்கின்றதும், வினைத்திறன்மிக்கதுமான நிர்மாணக் கைத்தொழிலை இலங்கையில் உருவாக்குவதாகும். அரசதுறை மற்றும் தனியார் துறையுடன் தொடர்புடைய நிர்மாணக் கைத்தொழிலுக்கு இந்தக் கொள்கை பொதுவாக ஏற்புடையதாக இருக்கும்.

மேலும் நிர்மாணக் கைத்தொழிலின் சகல தரப்பினர்களுக்கும் உபாயமுறையில் தலைமை தாங்குதல், நிலையான வளர்ச்சி, மறுசீரமைப்பு, மேம்படுத்தலை ஊக்குவித்தல், குறைவான செலவினம், அனர்த்தங்களை எதிர்கொள்ளல், சுற்றாடலுக்கு சாதகமான தொழில்நுட்பம், கட்டிடப் பொருட்கள் மற்றும் கட்டமைப்புக்களை மேம்படுத்தல், உகந்த ஆராய்ச்சிகளை மேம்படுத்தல், ஆராய்ச்சி நடவடிக்கைகளை பிரபல்யப்படுத்தல் மற்றும் வெளியிடல், தரங்கள் மற்றும் ஒழுங்கநெறிகள், உபயோகத் தொகுப்புக்களைத் தயார் செய்தல் மற்றும் நிர்மாணச் சேவைகளை ஏற்றுமதி செய்வதை மேம்படுத்துவது இந்தக் கொள்கையின் நோக்கங்களுக்கு உரித்தானதாகும்.

2016 நவம்பர் 08 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது இந்த நிர்மாணிப்பு பற்றிய தேசிய கொள்கை மற்றும் அதனை அமுல்படுத்தும் பொறிமுறைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

### ❖ நிலையான தொழில்நுட்ப விலைமனுக்குழு

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நிலையான விலைமனுக்குழு 2016ஆம் ஆண்டில் பிரதான 45 கருத்திட்டங்கள் தொடர்பிலான விலைமனுக்களின் மதிப்பீட்டை மேற்கொண்டதுடன் ரூபா பில்லியன் 3.651 க்காக சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்டங்களில் ரூபா பில்லியன் 0.556ஐ அரசாங்கத்திற்கு சேமித்துக்கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அரசாங்க கருத்திட்டங்களின் நிதிசார் வெளிப்படைத்தன்மையை பேணிவருவதற்கு இந்த தொழில்நுட்ப விலைமனுக்குழு பெரும் பங்களிப்பைச் செய்துவருகின்றது.

### ❖ அரச துறை நிர்மாணிப்பு நிறுவனங்களுக்கு நிர்மாண ஒப்பந்தங்களை பெற்றுக் கொடுத்தல்

அரசதுறையின் நிர்மாணிப்பு நிறுவனங்கள் அண்மைக் காலத்தில் அரசதுறையில் மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்பை அடுத்து தனியார் துறையுடன் போட்டித்தன்மைமிக்கதாக ஒப்பந்தங்களைப் பெற்றுக் கொள்ளும் போது காணப்படுகின்ற அசௌகரியங்கள் அமைச்சரவையில் கௌரவ அமைச்சரினால் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவை துணைக்குழுவினால் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, நிதி, மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்களை

உள்ளடக்கிய குழுவிடமிருந்து கூட்டு அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்படி அறிக்கைக்கு அமைய தனியார் துறையின் போட்டித்தன்மைமிக்க ஒப்பந்த விலைக் கட்டுப்பாடு, பயிற்றப்பட்ட ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு, பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், கனிய அளவையாளர்களுக்கு சிறந்த தொழில்சார் பயிற்சி, நாட்டின் அவசரத் தேவைகளின் போது அவசியமாகின்ற சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் என்ற வகையில் நிர்மாணிப்புக் கைத்தொழிலின் தரநியமங்களை பாதுகாப்பதற்காக இந்த நிறுவனங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் அவசியத்தன்மையும் விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் இந்த அமைச்சின் கீழ் உள்ள அரச பொறியியல் கூட்டுத்தாபனம் 2016–2017 ஆண்டுகளுக்கு ஒரே தடவையில் பெறுமதி ரூபா மில்லியன் 16,000 ஆன கருத்திட்டங்களும், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் ஒரே தடவையில் பெறுமதி ரூபா மில்லியன் 7,300 ஆன கருத்திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக நேர்வரிசை அமைச்சுடனான கலந்துரையாடல் மூலம் மேற்படி பெறுமதக்கு ஏற்றவாறு போதியளவு எண்ணிக்கையான கருத்திட்டங்களை இந்த நிறுவனங்களுக்கு நிரந்தரமாக வழங்க வேண்டுமென்றும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன், அரச துறையின் நிர்மாணிப்பு ஒப்பந்தங்களை வழங்குவது தொடர்பாக பின்பற்ற வேண்டிய முறையை உள்ளடக்கிய சுற்றறிக்கையை வெளியிடுமாறும் நிதி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை அமுல்படுத்துவதானது, அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் நிலைத்திருத்தலுக்கு காரணமாக அமையும்.

- **நிர்மாண ஒப்பந்தங்களின் தாமதங்களை ஒழித்தல்**

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிர்மாணத்துறை தொடர்பான ஆறு அரச நிறுவனங்களின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்வது மாதாந்தம் மேற்கொள்ளப்படுவதுடன் இதன்போது தேசிய ரீதியாக முக்கியம் பெறுகின்ற நிர்மாணிப்புக் கைத்தொழில் தொடர்பான சிக்கல்களை ஆராய்வதற்கும் அதற்கான தீர்வுகளைக் கண்டறிவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய நிர்மாணிப்பு ஒப்பந்தங்களில் காணப்படுகின்ற தாமதங்கள் பற்றி இங்கு அடிக்கடி அறிக்கையிடப்பட்டுள்ளதன் காரணமாக நிர்மாணிப்பு ஒப்பந்தங்களின் தாமதங்களில் தாக்கம் செலுத்துகின்ற சிக்கல்களை ஆராய்ந்து தீர்வுகளை பிரேரிப்பதற்காக பங்கேற்பு செயலமர்வொன்று 2016.09.13ஆந் திகதி வீடமைப்புத்திட்டமிடல் மற்றும் கட்டிட நிலையத்தில் (CHPB) ஒழுங்குசெய்யப்பட்டது.

மேற்படி செயலமர்வில் நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற அரச நிறுவனங்கள் மற்றும் நிர்மாணத்துறைக்கான சேவைகளை ஆற்றுகின்ற அரச நிறுவனங்களுடன் பிரதான ஒப்பந்த நிறுவனங்கள் பங்கேற்றன. மேலும் மாகாணசபைகளை பிரதிநிதித்துவம் செய்யும் வகையிலும் செயலமர்வில் பலர் பங்கேற்றனர்.

மேற்படி செயலமர்வின் மூலம் நிர்மாண உடன்படிக்கைகளின் தாமதங்களுக்கு தாக்கம் செலுத்துகின்ற பரந்தளவிலான சிக்கல்கள் பல இனங்காணப்பட்டுள்ளதுடன் அவற்றைத் தீர்த்துக்கொள்வதற்காக குறுங்கால நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய கருத்துக்களை கல்விமான்கள் முன்வைத்தனர்.

அதற்கமைய 2017ஆம் ஆண்டு முதல் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் மேற்படி தீர்வுத்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளை

அமுல்படுத்துவதற்கும் அதன்மூலம் நிர்மாணிப்புக் கைத்தொழிலில் நிலையானதொரு புத்தெழுச்சியை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 9.5. தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு சொத்தாண்மை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்குச் பொறுப்பேற்கப்பட்ட வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பது தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உறுதிகளின் எண்ணிக்கை 07 ஆகும். மேலும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்தவும் 2016 ஆம் ஆண்டில் அமைச்சுக்கு ஆற்றல் கிடைத்தது.

வீடமைப்புச் சொத்தாண்மை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுக்கும் போதும் ஒவ்வொரு வாடகைக் குடியிருப்பாளரிடமிருந்தும் வீட்டிற்கான விலைமதிப்புப் பெறுமதி அறவிட்டுக்கொள்ளப்பட்டதுன், 2016 ஆம் ஆண்டில் அவ்வாறு அறவிட்டுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகையையும் தேசிய வீடமைப்பு நிதியத்தில் செலவு வைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 9.6. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

2016 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய உத்தேச கணக்காய்வு அறிக்கைகள் 29 இல் 14 இன் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடிந்ததுடன், 15 அறிக்கைளின் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இதற்கான முக்கிய காரணம் விசாரணை நடவடிக்கைகளை வழிநடாத்துவத்றகும், கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பிலான அறிவைக் கொண்ட அனுபவம்மிக்க பதவியணியினர் இப்பிரிவில் இல்லாமையாகும். எவ்வாறாயினும் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைய உத்தேச அடிப்படை விசாரணைகள் 06 இன் வேலைகளை 2016 ஆம் ஆண்டு பூர்த்தியடைய முன்னர் நிறைவு செய்வதற்கு ஆற்றல் கிடைத்து

மேலும், வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் 04 உம் ஒரு காலாண்டுக்கு ஒன்று வீதம் முறையாக நடாத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் சம்பந்தமான சிக்கல்கள் பற்றி கலந்துரையாடப்பட்டு அவற்றை சீர்செய்வதற்கும் சிக்கல்களைக் குறைத்துக்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# 2016 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சில அபிவிருத்திக் கருத்திட்டங்கள்



செமட்ட செவண – சில்ப சவிய நிர்மாணக் கலைஞர்களை பயிற்றுவித்தல்



நிர்மாண தொழில்நுட்பக் கலைஞர்களை பயிற்றுவித்தல்- CETRAC பெலவத்த



லுனாவ வீடமைப்புத் திட்டம்



தேசிய கமத்தொழில் தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம் - கன்னொருவ



வலஸ்முல்ல பஸ் தரிப்புநிலையம்



கொலமுன ஓயா பாலம்

## 10. 2016 ஆம் ஆண்டு அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள்

❖ **வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது எதிர்நோக்கிய சவால்கள்**

- **காணிச் சிக்கல்கள்**

இந்த அமைச்சு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் பல்வேறு வகையிலான பல வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது எழுந்த பிரதானமானதொரு சிக்கலாக வீடுகளை நிர்மாணிக்கப் பொருத்தமான காணிகளைச் சுவீகரிப்பதிலுள்ள அசௌரிகங்கள் மிக முக்கியமானதாக உள்ளது.

குறிப்பாக மாதிரிக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய மாதிரிக் கிராமங்களை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான காணிகளைத் தெரிவு செய்யும் போது இந்த நிலைமை கடுமையாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கொழும்பு மற்றும் கம்பஹா போன்ற மாவட்டங்களில் காணப்படுகின்ற மட்டுத்தப்பட்டளவான காணிகளில் ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையான வீடுகளை நிர்மாணிப்பதற்கு உகந்த அரசுக்கு உரித்தான காணிகள் இல்லாமை காரணமாக மேற்படி மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது கடுமையான தடைகள் எழுந்தன. இதற்கு மேலதிகமாக கேகாலை, பதுளை, இரத்தினபுரி மற்றும் கண்டி போன்ற மாவட்டங்களில் மண்சரிவுப் போக்கு கூடுதலாக காணப்படுகின்ற மாவட்டங்களில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு உகந்ததென இனங்காணப்பட்டுள்ள காணிகளின் அளவு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளதனால் நாட்டின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மேற்படி மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாதிரிக் கிராமங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும்.

மேலும், ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்ற காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக மேற்படி மாவட்டங்களில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு உகந்த காணிகளை இனங்காண்பதில் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்ட போதிலும், ஆண்டின் இறுதியில் கனிசமானளவு காணிகளில் புதிய மாதிரிக் கிராமங்கள் பலவற்றை நிர்மாணிக்கும் பணிகளை முன்னெடுக்கும் ஆற்றல் கிடைத்தது.

அத்துடன் இனங்காணப்பட்ட காணிகளை அளவிடும் பணிகளை மேற்கொள்ளல், காணித் துண்டுகளை ஒதுக்கல் மற்றும் காணிகளை சுவீகரித்தில் ஆகிய பணிகளின் போது ஒருசில தாமதங்கள் ஏற்பட்ட போதிலும் ஆண்டினுள் இலக்காகக் கொள்ளப்பட்ட புதிய மாதிரிக் கிராமங்கள் அனைத்தினதும் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும் ஆற்றல் அமைச்சுக்குக் கிடைத்தது.

எவ்வாறாயினும், நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களுக்கு உப நகர அதிகாரப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு தொடர்மாடி வீடுகளை நிர்மாணிப்பதற்கு போதியளவான நிலப்பிரதேசத்தைக் கொண்ட காணிகளைப் பெற்றுக் கொள்வதிலுள்ள அசௌகரியங்கள் காரணமாக இந்த ஆண்டில் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் 4 வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிக்கும் ஆற்றல் கிடைத்தது.

- **வீடமைப்புத் திட்டங்கள்/ மாதிரிக் கிராமங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிக்கல்கள்**

இந்த அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற வீடமைப்பு

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலுள்ள புதிய மாதிரிக் கிராமங்கள் சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட மாதிரிக் கிராமங்களாகும். இந்த மாதிரிக் கிராமங்களுக்கு குடிநீர், மின்சாரம் மற்றும் பிரவேசப் பாதைகளைப் பெற்றுக் கொள்ளும் போது 2016 ஆம் ஆண்டு அமைச்சு கடும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

இதன் போது எதிர்நோக்கிய முக்கியமான சிக்கலாக இருப்பது குடிநீரைப் பெற்றுக் கொள்ளும் போது ஏற்பட்ட அசௌகரியமாகும். குறிப்பாக புதிய மாதிரிக் கிராமங்களுக்கு குடிநீரைப் பெற்றுக் கொள்ளும் போது குறித்த பிரதேசங்களில் காணப்படுகின்ற நிலத்திற்குக் கீழான நீர்ப் பற்றாக்குறை, குழாய் நீர் வசதிகள் இல்லாமை காரணமாக புதிய வீடுகளுக்கு நீர் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு பெருமளவு நிதியை செலவிட வேண்டி ஏற்பட்டது. இதற்கு மேலதிகமாக மின்சாரம் மற்றும் பிரவேசப் பாதைகளைப் பெற்றுக் கொள்ளும் போதும் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக நிர்மாணிக்கப்பட்ட பல புதிய மாதிரிக் கிராமங்களை மக்களிடம் கைளிக்கும் ஆற்றல் இந்த ஆண்டில் கிடைக்கவில்லை.

- **பயனாளிகளைத் தெரிவு செய்வதும், வீடுகளை நிர்மாணிப்பதும்**

புதிய வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமங்களை நிர்மாணிப்பதற்குப் பயனாளிகளைத் தெரிவு செய்யும் போது பிரதேச செயலாளர்கள் ஊடாக வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதன் போது பயனாளிகளைத் தெரிவ செய்துகொள்வதற்கான காணிக் கச்சேரிகளை நடாத்தும் முறையியலுக்கு குறிப்பிடத்தக்களவு காலம் செலவானமையும் அவதானிக்கப்படுகின்றது.

அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தும் பங்கேட்பு அபிவிருத்தி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களாக உள்ளதனால் பயனாளிகளின் தலையீடு மற்றும் பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல், வீடுகளை இலக்குக் காலப்பகுதிக்குள் நிர்மாணித்து முடிக்க உதவியாக உள்ளது. எனினும் மேற்படி முறையியலைப் பின்பற்றி தெரிவு செய்துகொள்ளும் பயனாளிகள் மிகவும் வறிய மக்களாக உள்ளதனால் பங்கேட்பு அபிவிருத்தி செயன்முறையில் தமது வாழ்வாதாரத்தையும் ஈடுசெய்துகொண்டு தமது வீடுகளை நிர்மாணித்துக் கொள்ள பங்களிப்புச் செய்யும் போது உத்தேச காலப்பகுதிக்குள் வீட்டின் வேலைகளை நிறைவு செய்துகொள்ளும் ஆற்றல் கிடைக்காத சந்தர்ப்பங்களையும் அவதானிக்க முடிந்தது.

- **காலநிலை தாக்கங்கள்**

கடந்த ஆண்டில் நாடு எதிர்நோக்கிய பாதகமான காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் வரட்சி காரணமாக வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்கு கடும் தாக்கம் ஏற்பட்டது. இதற்கு மேலதிகமாக வீடுகளை நிர்மாணிக்கத் தேவையான மணல், பலகைகளைப் பெற்றுக் கொள்வதில் நிலவுகின்ற அசௌகரியங்கள் காரணமாகவும் இலக்காகக் கொள்ளப்பட்ட சகல வீடுகளினதும் வேலைகளை2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய முடியவில்லை.

❖ **நிர்மாணத் துறையின் சிக்கல்கள்**

இலங்கை அரச பொறியயியல் கூட்டுத்தாபனம், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், கட்டிடத் திணைக்களம் மற்றும் அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் பல இந்த அமைச்சின் கீழ் நிர்மாணக் கருத்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்ற நிறுவனங்களாகும் என்பதுடன், கடந்த ஆண்டிலும் அரச துறையில் கனிசமானளவு நிர்மாணக் கருத்திட்டங்கள் இந்த நிறுவனங்களுக்குக் கிடைக்காமையானது கடந்த ஆண்டிலும் காணப்பட்டது.

மேலும் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் கடந்த பல ஆண்டுகளாக அமுல்படுத்தியுள்ள நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு பல்வேறு அரச நிறுவனங்கள் மேற்படி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியுள்ள சுமார் ஒரு பில்லியன் ரூபா ஆன தொகையை அறவிட்டுக் கொள்ளும் ஆற்றல் இல்லாமையினால் குறித்த கூட்டுத்தாபனம் கடும் நிதி நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளது.

### ❖ அமைச்சின் பதவி வெற்றிடங்களை நிரப்ப முடியாது போனமை.

அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) மற்றும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) ஆகிய பதவிகளின் வெற்றிடங்கள் 2016 நடுப்பகுதி முதல் ஆண்டின் இறுதி வரை காணப்பட்டதனால் அமைச்சின் நிருவாக பிரிவின் கடமைகளுக்கு கடும் தடங்கள் ஏற்பட்டது. மேலும் உதவிப் பணிப்பாளர் (வீடமைப்பு) உதவிப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு) ஆகிய பதவிகள் ஆண்டு முழுவதிலும் வெற்றிடமாகக் காணப்பட்டன. இதற்கான முக்கிய காரணம் இலங்கை நிருவாக சேவை மற்றும் இலங்கை பொறியியலாளர் சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்குக் காணப்பட்ட பற்றாக்குறையாகும்.

மேலும் அலுவலர்களது இடமாற்றம், ஓய்வுபெறல் மற்றும் உயிரிழத்தல் காரணமாக அமைச்சின் ஒட்டுமொத்த பதவியணியில் அடிக்கடி பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டதுடன், இதன் காரணமாக அமைச்சின் அன்றாட பணிகளை முறையாக மேற்கொள்வதில் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.


නිවාස හා ඉදිකිරීම් අමාත්‍යාංශය
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு
Ministry of Housing & Construction